வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவமும் நமது பொறுப்புகளும் பக்கம் 6

இறை மன்னிப்பின் காட்சிகள் (தொடர்-5) பக்கம் 12

இஸ்முஹு[6] அஹ்மது என்ற முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் (தொடர்-5) பக்கம் 16

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-4) பக்கம் 20



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | April 2022 | Issue No. 5

Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005

Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340





## நோன்பு மற்றும் தொழுகை

நோன்பு மற்றும் தொழுகையின் ஆன்மீக உயர் தகுதியைப் பற்றி விளக்கும் போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நோன்பு மற்றும் தொழுகைகள் ஆகிய இரண்டும் இறை வணக்க முறைகளாக இருக்கின்றன. நோன்பின் அழுத்தம் உடல் மீது உள்ளது. தொழுகையின் அழுத்தம் ஆன்மாவின் மீது உள்ளது. தொழுகையினால் மன உருக்கம் ஏற்படுகிறது. இதன் காரணமாக அது மேலானதாக உள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 7 பக்கம் 378-379)



# திருக்குர்ஆன்

نம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோர்களுக்கு நோன்பு கடமையாக்கப் –பட்டது போன்று, உங்களுக்கும் அது கடமை யாக்கப்பட்டுள்ளது. இதனால் நீங்கள் (ஆன்மீக, நல்லொழுக்கப் பலவீனங்களில் இருந்து) தவிர்ந்து கொள்ளலாம். (2:184)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ
كَمَا كُتِبَ عَلَى الَّذِينَ مِنْ قَبْلِكُمْ
لَعَلَّكُمْ تَتَّقُونَ ۙ



# ஹதீஸ்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ரமலான் மாதத்தில் ஈமானின் நிலையில், தன்னை ஆய்வு செய்தவாறு இரவில் எழுந்து இறை வணக்கத்தில் ஈடுபடுபவர், அவரை அவரது தாய் பெற்றெடுத்த நாளில் இருந்ததைப்போல் அவரது பாவங்களில் இருந்து தூய்மையாகி விடுகிறார்.
(ஸுனன் நஸாயீ)

حدثنى عبدالرحمن بن عوف عن رسول الله صلى الله عليه وسلم قال: من قام رمضان ايماناً و احتساباً خرج من ذنوبه كيوم ولدته امه.

(سنن النسائى' 1: 308' كتاب الصيام' رقم حديث : 2208)

# ரமலான் மாதத்தில் அல்லாஹ்வின் கருணை பொங்கி எழுகிறது!

## ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 19.06.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ குத்பாவிலிருந்து....



***ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:***

ரமலான் மாதம் வருகின்ற போது சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. மேலும் நரகத்தின் வாயில்கள் அடைக்கப்படுகின்றன. (சுனன் திர்மதி கிதாபுஸ் ஸவ்ம் பாபு மாஜாஅ ஃபீ ஃபஸ்லி ஷஹ்ரி ரமலான் ஹதீஸ் 682)

அல்லாஹ்வின் கருணை இம்மாதத்தில் குறிப்பாக பொங்கி எழுகின்றது. மேலும் நம்பிக்கையாளர்களின் மீது அல்லாஹ்வின் கருணை மற்றும் அருட்களின் மழை பொழிகின்றது. ஆனால் அத்தோடு இந்த அருட்களை ஈர்ப்பதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த நாட்களில் எவ்வித வீணான விஷயங்களும் பேசப்படக் கூடாது; எவ்வித கூச்சல் குழப்பமும் இருக்கக் கூடாது; எவ்வித ஏச்சுப் பேச்சும் சண்டைகளும் இருக்கக் கூடாது; ஒவ்வொரு தீமைக்கு எதிராகவும் ஒரு நோன்பாளியின் பதில் நான் நோன்பாளியாக இருக்கின்றேன் என்றே இருக்க வேண்டும் என்ற ஒரு சில நிபந்தனைகளையும் கூறியுள்ளார்கள். (சஹீஹ் புகாரி கிதாபுஸ் ஸவ்ம் பாபு ஃபஸ்லிஸ் ஸவ்ம் ஹதீஸ் எண் 1894)

மேலும் நான் இறைவனுக்காக இந்த அனைத்து தீமைகளில் இருந்தும் தவிர்ந்திருக்கின்றேன் என்ற நிலை இருக்கும் போது, இறைவனுக்காக முயற்சி செய்து இந்த மாதத்தில் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்ப தன்னுடைய வாழ்க்கையை கழிக்கும் போது பிறகு உண்மையான முறையில் அது நோன்பாக இருக்கும்.

பிறகு ரமலான் மாதத்தின் முக்கியத்தவம் என்ன? எவர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது? எவ்வாறு நோன்பு வைக்க வேண்டும்? என்னென்ன விதிமுறைகள் உள்ளன? என்பது தொடர்பாக அல்லாஹ் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுதல் என்ற விஷயத்தோடு இதனை எவ்வாறு இணைத்துக் கூறியுள்ளான் என்றால், وَاِذَا سَاَلَكَ عِبَادِیۡ عَنِّیۡ فَاِنِّیۡ قَرِیۡبٌ ؕ اُجِیۡبُ دَعۡوَۃَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ فَلۡیَسۡتَجِیۡبُوۡا لِیۡ وَلۡیُؤۡمِنُوۡا بِیۡ لَعَلَّہُمۡ یَرۡشُدُوۡنَ என்று கூறியுள்ளான். என்னுடைய அடியார்கள் என்னைப் பற்றி உம்மிடம் கேட்டால் நான் அவர்களுக்கு அருகில் இருக்கின்றேன் என்று கூறுவீராக. துஆ செய்யக்கூடியவர் என்னை அழைக்கும் போது நான் அவருடைய துஆக்களை ஏற்றுக் கொள்கின்றேன். ஆக, நேர்வழி பெற வேண்டும் என்பதற்காக துஆ செய்பவர்களும் என்னுடைய கட்டளைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் என்மீது நம்பிக்கை வைக்க வேண்டும். (2:187)

அல்லாஹ் கூறுகின்றான். ரமலானின் நாட்கள் எவ்வளவு அருளுக்குரிய நாட்கள் என்றால் இந்த நாட்களில் செய்யப்படக் கூடிய இறைவணக்கங்களுக்குப் பிறகு என்னுடைய அடியான் என்னைப் பற்றி கேட்டால் நான் முற்றிலும் அருகில் இருக்கின்றேன் என்று கூறுவீராக. اُجِیۡبُ دَعۡوَۃَ الدَّاعِ اِذَا دَعَانِ அழைக்கக்கூடியவர் என்னை அழைக்கும் போது நான் அவருடைய துஆக்களை ஏற்றுக் கொள்கின்றேன்.

ஆக, இந்த நாட்களிலிருந்து நாம் அதிகமதிகமாக பலன் பெற வேண்டும். பொதுவாக ரமலானில் அல்லாஹ் ஷைத்தான்களை கட்டிவிட்டு பிறகு சொர்க்கத்தின் கதவுகளை திறந்துள்ளான். மேலும் அடியார்களுக்கு அருகில் வந்துள்ளான். பிறகு ரமலானின் ஜுமுஆக்களிலிருந்தும் முழுமையாக பலன் பெற வேண்டும். இந்த நாட்களில் மிகவும் பணிவுடனும், கலப்பற்ற மனத் தூய்மையுடனும் அல்லாஹ்விடம் நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான துஆ என்னவென்றால், அல்லாஹ்வே! எனக்கு ரமலானில் மட்டுமின்றி சாதாரண நிலைமைகளிலும், இரவுகளிலும், பகல்களிலும் எவரது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றதோ அந்த மக்களோடு என்னை சேர்த்து வைப்பாயாக. அதன் மூலம் ரமலான் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். இறையச்சத்தின்படி நடக்க வைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். நான் தொடர்ந்து நேர்வழி பெறக்கூடியவர்களோடு இணைய வேண்டும்.

மனிதன் இறைவனுக்கு முன்பு கலப்பற்ற மனத்தூய்மையுடன் குனியும்போது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காட்சியை காண்பதோடு மட்டுமின்றி இறையச்சம் மற்றும் நன்மையில் நிலைத்திருந்தவாறு தன்னுடைய ஈமானிலும் உறுதி அடைந்து கொண்டே செல்கின்றான். இவ்வாறு அல்லாஹ்வின் அருட்களை பெறக்கூடியவனாக ஆகி விடுகின்றான்.

ஆக, ரமலான் அளவற்ற அருட்களின் மாதமாகும். ஆனால், அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்றுக் கொள்பவர் –களுக்கும், ஈமானில் முன்னேறுபவர்களுக்குமே இந்த அருள்கள் கிடைக்கின்றன. ரமலானின் ஜுமுஆக்களில் முறையாக கலந்து கொள்வோம். பிறகு இதன் பக்கம் கவனம் இருந்தாலும் சரி; இல்லாவிட்டாலும் சரி என்ற எண்ணம் இருந்தால் பிறகு இது அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்காததாகும். மேலும் ஈமானில் பலவீனத்தை வெளிப்படுத்துவதாகும். இது போன்ற பலவீனமான நிலை இருக்குமென்றால் எங்களுடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று அல்லாஹ்விடம் முறையீடும் இருக்கக்கூடாது. ஆக, அல்லாஹ்வின் இரட்சிப்பின்கீழ் வருவதற்காக நிம்மதியிழந்திருக்கும் ஓர் உண்மையான அடியான் மிகவும் பணிவுடனும், உருக்கத்துடனும் தன்னுடைய பலவீனங்களையும் தவறுகளையும் ஏற்றுக் கொண்டவாறு இந்த நாட்களை துஆக்களில் கழிக்க வேண்டும். ரமலான் மாதத்தில் ஜுமுஆக்களில் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ளுதல், தொழுகையில் அதிக எண்ணிக்கையில் கலந்து கொள்ளுதல்

போன்றவை தற்காலிகமானதாக இருக்கக்கூடாது. நான் இந்த நாட்களில் மிக அருகில் வருகின்றேன் என்று அல்லாஹ் கூறுகின்றான். எனவே, இந்த நாட்களின் துஆக்கள் போதுமானது என்று சிலர் கருதுகின்றனர். இது தன்னுடைய ஆன்மாவை ஏமாற்றுவதாகும். ஆக, இதிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். முழுமையான பணிவுடன் இறைவனுடைய அடியானாக ஆகி அல்லாஹ்வின் நெருக்கத்தை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் எப்போதுமே தொலைவில் இல்லை. அவன் எல்லா இடங்களிலும், எல்லா நேரத்திலும் இருக்கின்றான். ஆனால், அடியானின் நிலைமையின் மூலம் அவனின் நெருக்கத்தின் வெளிப்பாடு அடியான் களப்பற்ற மனத்தூய்மையுடன் அல்லாஹ் அல்லாதவற்றை விட்டு விட்டு முழுக்க முழுக்க இறைவனுக்கு முன்பு குனியும் போதுதான் ஏற்படுகின்றது. இந்த நிலை இருந்தால் நம்முடைய துஆக்களும் ஏற்றுக் கொள்ளப்படும். மேலும் நாம் அல்லாஹ்விடம் கேட்கக்கூடிய அனைத்தும் கிடைக்கும். அல்லது அல்லாஹ்வின் பார்வையில் நமக்கு எது சிறந்ததோ அது கிடைக்கும்.



ஆக, அதிகமதிகமாக இந்த நாளில் தனக்காகவும், தன்னுடைய உறவினர்களுக்–காகவும், ஜமாஅத் அன்பர்களுக்காகவும், நம் அனைவருக்காகவும் நம்மில் ஒவ்வொருவருக்கும் இறையச்சம் கிடைக்க நாம் துஆ செய்ய வேண்டும். ஒருவர் மற்றவருக்காக வேதனையுடன் துஆ செய்கின்ற போது மலக்குமார்களும் நமக்காக துஆவில் இணைந்து விடுவார்கள். ரமலானினுடைய பரகத்துகளின் உண்மையான மற்றும் நிலையான காட்சிகளை நாம் காணக்கூடியவர்களாக ஆவோம். தக்வா என்பது என்ன ? தக்வா என்பது இறைவனுடைய அச்சம் மற்றும் பயம் ஆகும். அல்லாஹ்வினுடைய அச்சம் நம்முடைய உள்ளத்திலிருந்து அழிந்து விடக்கூடிய அளவிற்கு பாவம் செய்ய துணிந்து விடுவதை தவிர எதுவரை நம்மிடம் இறைவனுடைய அச்சமும் பயமும் இருக்குமோ நம்முடைய பலவீனங்களையும் பாவங்களையும் அல்லாஹ் மறைப்பான். நாம் அவனின் பாதுகாப்பில் இருப்போம். நம்முடைய பலவீனங்களின் காரணமாக நம்மிடமிருந்து பாவம் நிகழ்ந்து விட்டால் பிறகு அல்லாஹ்வினுடைய அச்சம் ஏற்படுகிறது. பயம் ஏற்படுகிறது என்றால் அல்லாஹ் மன்னிக்கக் கூடியவனாக இருக்கின்றான்.

அல்லாஹ்வின் அச்சம் என்பதன் பொருள் இறைவனின் அன்பு என்பதாகும். இந்த அன்பை நாம் வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் வரையோ அல்லது நம்முடைய உள்ளத்தில் இந்த அன்பு இருந்தாலோ பிறகு அழிவிலிருந்து பாதுகாப்பாக இருப்போம். ஆனால் நிபந்தனை என்னவென்றால் உண்மையான அன்பாக இருக்க வேண்டும். ஏமாற்றுவதாக இருக்கக்கூடாது. அல்லாஹ் உள்ளங்களின் நிலையை அறிகின்றான். அவனை ஏமாற்ற முடியாது. உள்ளத்தில் அன்பு இருக்குமென்றால் எப்போதாவது அது வெளிப்பட்டு விடும். அல்லாஹ்வினுடைய அச்சம் சிலவற்றிலிருந்து தடுக்கின்றது. அது அந்த அன்பின் காரணத்தினால் ஆகும். அந்த அன்பின் காரணத்தினால் தடுமாறி விழுந்தும் கூட அவனுடைய கட்டளைகளின்படி செயல்பட்டால் பிறகு இறைவன் தன்னுடைய அடியானின் அன்பிற்கு தன்மான உணர்வுடையவனாக இருக்கின்றான். அடியானை வீணாக விடுவதில்லை. பிறகு அவனுக்கு பாவமன்னிப்பு கோருவதற்கான நல்வாய்ப்பையும் வழங்கி விடுகின்றான்.

ஆக, இந்த மாதத்தின் அருட்களிலிருந்து பலன் பெறு–வதற்கு நம்மில் ஒவ்வொருவரும் இறைவனின் அடியானாக ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நம்முடைய இயலாமையின் காரணமாக அவன் நம்முடைய துஆக்களை ஏற்றுக் கொள்ள கொஞ்சம் தாமதித்தாலும் தாய் தன்னுடைய குழந்தையின் சீர்திருத்தத்–திற்காக சில நேரத்திற்கு அக்குழந்தையை விட்டும் தவிர்ந்திருப்பதைப் போன்று அதில் கடுமையான கோபம் இருப்பதில்லை. ஆனால், குழந்தை தாயின் மீது இருக்கக்கூடிய அன்பின் காரணமாக அவளின் பக்கம் செல்லும் போது தாய் அவனை நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறாள். மாறாக, அதற்கு முன்பாகவே தாய், குழந்தை எவ்விதமான நடத்தையை வெளிப்படுகிறது. என்னை நோக்கி வருகிறதா என்பதை கடைக்கண்ணால் பார்க்கவும் செய்கிறாள். எவ்வாறிருப்பினும் குழந்தை செல்லும் போது அந்த கோபம் நீங்கி விடுகிறது.

ஆக, அல்லாஹ் தாயை விட அதிகமாக மன்னிக்கக் கூடியவனாவான். என்னுடைய அடியான் எப்போது என்னிடம் பாவமன்னிப்பு கோரி என்னிடம் வருகின்றான். நான் அவனை அதன் மூலம் மன்னிக்க வேண்டும் என அவன் எதிர்பார்க்கிறான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “இறைவன் மீது ஆணையாக ! பாலைவனத்தில் தன்னுடைய தொலைந்து போன ஒட்டகம் கிடைப்பதனால் மகிழ்ச்சி அடையக் கூடியவனை விட அதிகமாக அல்லாஹ் தன்னுடைய அடியான் பாவமன்னிப்புக் கோரும் போது மகிழ்ச்சியடைகின்றான்.'' (சஹீஹ் புகாரி கிதாபுத் தஃவாத் பாபுத் தவ்பா ஹதீஸ் எண் 6309)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் கூறுகிறான். எவரேனும் ஒருவர் ஒரு ஜான் என்னை நோக்கி வந்தால் நான் ஓர் அடி அவனை நோக்கி செல்கின்றேன். அவன் எனக்கு ஓர் அடி நெருங்கி வந்தால் நான் இரண்டு அடி அவனை நோக்கி நெருக்கமாகின்றேன். அவன் என்னை நோக்கி நடந்து வந்தால் நான் அவனின் பக்கம் ஓடி வருகின்றேன். (சஹீஹ் புகாரி கிதாபுத் தவ்ஹீது பாபு கவ்லுல்லாஹிதஆலா வயுஹஸ்ஸிருகுமுல்லாஹு நஃப்ஸஹூ ஹதீஸ் 7405)



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த கருத்தை அதாவது மனிதனுக்கு அல்லாஹ்வின் அன்பை புரிந்து கொள்வதற்கு எந்த அளவிற்கு சக்தி இருக்கின்றது என்பதை மிகவும் அழகிய முறையில் இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள். அல்லாஹ் உடைய செயல்களைப் பற்றி கூட புரிந்து கொள்ள முடியாத நம்மால் அவனின் அன்பின் நிலையை எவ்வாறு புரிந்து கொள்ள முடியும். அவனுடைய வெளிப்படையான விஷயங்களைக் கூட புரிந்து கொள்ள முடியவில்லை. பிறகு அவனின் அன்பின் நிலையை எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்களும் அல்லாஹ்வின் அன்பை உதாரணங்கள் மூலமாக புரிய வைக்க முயற்சித்துள்ளார்கள். இந்த அன்பைப் பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய இன்னொரு உதாரணத்தை நான் எடுத்துக் கூறுகிறேன்.

பத்ர் போரின் போது எதிரிகள் தோல்வியடைந்த போது ஏறக்குறைய போர் முடிவடைந்திருந்தது. காஃபிர்களின் பெரும் பெரும் படை வீரர்கள் தங்களுடைய வாகனங்களில் அமர்ந்து அவற்றை சாட்டையினால் அடித்து மிக விரைவாக போர்க்களத்திலிருந்து ஓடி முஸ்லிம்களிடமிருந்து விலகி வெகு தொலைவில் செல்வதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு பெண் எவ்வித அச்சமுமின்றி திரிந்து கொண்டிருந்தாள். அவளிடம் ஒரு வேகமும், பைத்தியத்தைப் போன்ற நிலையும் தென்பட்டது. சில சமயம் ஏதேனும் ஒரு குழந்தையை தூக்குவாள். சில நேரம் வேறொரு குழந்தையை தூக்குவாள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த பெண்ணைப் பார்த்த போது, இந்த பெண்ணினுடைய குழந்தை காணாமல் போய் விட்டான். இவள் அவனை தேடுகின்றாள் என சஹாபாவிடம் கூறினார்கள். தாயின் அன்பு எந்த அளவிற்கு மேலோங்கி இருந்தது என்றால் அவள் போர்க்களத்தில் இருக்கின்றாள். அங்கு எல்லா பக்கமும் அழிவு நிகழ்ந்திருக்–கின்றது என்பதைக் கூட அவள் உணரவில்லை. அந்த பெண் பைத்தியத்தைப் போன்று திரிந்து கொண்டிருந்தாள். எந்த குழந்தையைப் பார்த்தாலும் அதை தன்னோடு அணைத்து கொள்வாள். பிறகு அது அவளுடைய குழந்தை இல்லை என்பது தெரிய வந்த போது முன்னேறிச் செல்வாள். இறுதியில் அவளுக்கு அவளுடைய குழந்தை கிடைத்து விட்டது. அவள் அதை தன்னோடு அணைத்தாள். அதனுடன் அன்பு செலுத்தினாள். பிறகு உலகத்தைப் பற்றிய கவனமே இல்லாமல் அந்த குழந்தையை வைத்துக் கொண்டு அங்கேயே அமர்ந்து விட்டாள். இது போர்க்களம் என்ற கவலையும் அவளுக்கு இருக்கவில்லை. இங்கு எல்லா பக்கமும் சடலங்கள் சிதறிக் கிடக்கின்றன என்ற கவலையும் அவளுக்கு இருக்கவில்லை. இப்போது போர் முழுமையாக முடிவடையவில்லை; அவளுக்கு என்ன இழப்பு வேண்டுமானாலும் நேரலாம் என்ற எண்ணமும் அவளுக்கு இருக்கவில்லை.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவளுக்கு அவளுடைய குழந்தை கிடைத்ததும் எவ்வளவு நிம்மதியுடன் அமர்ந்து விட்டாள் என்பதை நீங்கள் பார்த்தீர்களா? ஆனால், அந்த குழந்தையை தேடும் போது எந்த அளவிற்கு நிம்மதியற்ற நிலைமை இருந்தது? அவள் நிம்மதியிழந்தவாறு ஓடிக் கொண்டிருந்தாள். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதே உதாரணம் தான் அல்லாஹ் தன்னுடைய அடியானின் மீது கொண்டிருக்கின்ற அன்பிற்கும் பொருந்தும். மாறாக, அவன் இதை விட அதிகமாக அன்பு கொண்டிருக்கின்றான். அடியான் தன்னுடைய பாவங்கள் மற்றும் தவறுகளின் காரணமாக இறைவனை இழந்த போது அந்த பெண்ணிற்கு அவளுடைய குழந்தை காணாமல் போனதனால் ஏற்பட்ட துக்கத்தை விட அதிகமாக துக்கம் அல்லாஹ்விற்கு ஏற்படுகிறது. பிறகு அடியான் பாவமன்னிப்பு கோரி திரும்பும் போது அந்த பெண்ணிற்கு தனது குழந்தை கிடைத்த போது ஏற்பட்ட மகிழ்ச்சியை விட அதிகமான மகிழ்ச்சி அல்லாஹ்விற்கு ஏற்படுகின்றது.

ஆக, நம்முடைய இறைவன் எப்பொழுதும் மன்னிப்பதற்காக தயாராக இருக்கின்றான். நிபந்தனை என்னவென்றால் நாமும் அவனுடைய மன்னிப்பை தேடுவதற்கு தயாராக வேண்டும். நாம் எப்போது அவன் பக்கம் செல்கிறோம் என்பதை அவன் பார்க்கிறான். ஏதேனும் தாமதம் இருக்கும் என்றால் அது நம் தரப்பிலிருந்து தான் இருக்கின்றது. கவனக்குறைவு நம் தரப்பிலிருந்து தான் இருக்கின்றது. எவர் ஒருவர் இறைவன் முன் குனிகின்றாரோ, பாவமன்னிப்பு கோரியவாறு அவன் பக்கம் செல்கின்றாரோ, அவனிடம் பாவத்திற்கான மன்னிப்பை கேட்கின்றாரோ பிறகு இறைவனுடைய மன்னிப்பு அப்படிப்பட்டவரை போர்த்திக் கொள்கின்றது.

ஆக, இறைவனுக்கு முன்பு ஜமாஅத்தின் முன்னேற்றத்தை வேண்டியவர்களாக மிக அதிகமாக குனிய வேண்டும். இந்த துஆக்களுக்குரிய நாட்களில் இதற்காகவும் முழுமையான முறையில் துஆ செய்ய வேண்டும். நாம் நமது துஆக்களை நமக்கு மற்றும் நம்முடைய நெருக்கமானவர்கள் வரை மட்டும் எல்லைக்குட்பட்டதாக வைக்கக் கூடாது. மாறாக, இதை மிக அதிகமாக விரிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அப்போது தான் நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

# வஸிய்யத் அமைப்பின் முக்கியத்துவமும் நமது பொறுப்புகளும்

**மவ்லவி M. முஹம்மது சுல்தான் முஹீயுத்தீன்**

அல்லாஹ் கூறுகிறான்:

நிச்சயமாக நான் உங்களுடன் இருக்கிறேன். நீங்கள் தொழுகையினை சரியாக நிறைவேற்றி ஸகாத்துக் கொடுத்து, எனது தூதர்களிடத்து நம்பிக்கை கொண்டு, அவர்களுக்கு ஆதரவு அளித்து, அல்லாஹ்வுக்கு (உங்கள் பொருளின் நல்ல பகுதியினை) கடன் கொடுப்பீர்களாயின், கட்டாயமாக நான் உங்களிடமிருந்து உங்கள் தீமைகளை அழித்து விடுவேன். மேலும் கீழே ஆறுகள் ஓடுகின்ற தோட்டங்களில் உங்களை நுழையச் செய்வேன். ஆனால் உங்களுள் இதற்குப் பின்னரும் நிராகரிக்கின்றவர் நேரான பாதையிலிருந்து தவறிவிட்டார். (5:13)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) கூறுகின்றார்கள்: "நான், உண்மை மற்றும் மக்களிடையே ஈமானின் காலகட்டத்தை வரச்செய்வதற்காகவும், மறுபடியும் இறையச்சத்தை உருவாக்கவும் அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் இந்த எளியவன், உலகின் தற்போதைய மார்க்கங்களுள் திருக்குர்ஆன் கொண்டு வந்த மார்க்கம் மட்டுமே உண்மையை அடிப்படையாகக் கொண்டது. அல்லாஹ்வின் திருப்திக்கு ஏற்பவும் உள்ளது என்ற தூதுச் செய்தியினை அல்லாஹ்வின் படைப்பினங்களுக்கு எட்ட வைக்கும் நோக்கத்திற்காக மட்டுமே அனுப்பப்பட்டுள்ளேன். மேலும் இரட்சிப்பின் வாயிற்கதவு லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" ஆகும்.

1905 -ஆம் ஆண்டு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாற்றில் ஓர் அசாதாரணமான முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அன்னாரது வ.்.பாத் நெருங்கிவிட்டதைப் பற்றி தொடர்ந்து இல்ஹாம்கள் வந்து கொண்டிருந்தன. தான் அனுப்பப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றும் கவலையில் ஆழ்ந்திருந்தார்கள், ஏனெனில், எத்தகைய மகத்துவம் வாய்ந்த நோக்கத்திற்காக அன்னார் அனுப்பப்பட்டிருந்தார்களோ அது ஓரிரு தலைமுறையின் பணி அன்று. மாறாக தொடர்ச்சியான கடும் உழைப்பிற்கான அவசியம் இருந்தது. மேலும். தலைமுறை தலைமுறையாக, கிலா.்.பத் மூலம் அந்த பொறுப்பினை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடு செய்ய வேண்டியிருந்தது. எனவேதான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறை நாட்டத்திற்கேற்ப, 1905 -ஆம் ஆண்டு 'வஸிய்யத்' எனும் இறைத் திட்டத்தை செயல்படுத்தினார்கள். ஆயினும் 1400 ஆண்டுகளுக்கு முன்னரே இத்திட்டத்திற்கு வித்திடப்பட்டிருந்தது. ஏனெனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், வரவிருக்கும் மஸீஹ் தன்னை (அதாவது முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை) பின்பற்றுபவர்களுக்கு சுவர்க்கத்தில் கிடைக்கவிருக்கும் மேன்மையான அந்தஸ்தைப் பற்றி கூறுவார்கள் என்ற நற்செய்தியை தன்னுடைய உம்மத்திற்கு கூறியிருந்தார்கள்.

வஸிய்யத் திட்டம், கிலா.்.பத்திற்கு கட்டுப்பட்ட எப்படிப்பட்டதொரு அமைப்பு என்றால், அது மார்க்க, பௌதீக சீர்த்திருத்தம் மற்றும் வளர்ச்சி மட்டுமன்றி உலகின் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சனைகளுக்கு மிகச் சிறந்த தீர்வினை எடுத்துரைப்பதாக உள்ளது. உலகின் வேறெந்த அமைப்பும் இதனுடன் போட்டியிட முடியாது. சய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஐம்பது வருடங்களுக்கும் அதிகமான தனது கிலா.்.பத் காலகட்டத்தில் இந்த இறைத் திட்டத்தின் எல்லா அம்சங்களைப் பற்றியும் விளக்கியுள்ளார்கள். மேலும் ஜமாஅத்தினர்களுக்கு இதில் இணைவதன் பக்கமும் இந்த மகத்துவம் வாய்ந்த அமைப்பின் அங்கமாக ஆவதன் பக்கமும் வலியுறுத்தியுள்ளார்கள்.

வஸிய்யத் திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகின்றார்கள்: இந்த வஸிய்யத்தை செய்கின்றவர்களது செல்வம் அவர்களுக்கு என்றைக்கும் உதவி புரியக் கூடியதாக இருக்கும். அதற்கான நிரந்தர நற்கூலி கிடைக்கும். மேலும் தொடர்கின்ற நன்மைகளாக கருதப்படும். இறைவனது நோக்கம் யாதெனில், ஈமானில் முழுமைத்துவம் பெற்ற இப்படிபட்டவர்கள் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட வேண்டும். அதனால், இனிவரும் சந்ததிகள் ஒரே இடத்தில் அவர்களைக் கண்டு தங்களுடைய ஈமானைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். மேலும் அவர்களுடைய பணிகள் அதாவது இறைவனுக்காக அவர்கள் செய்த மார்க்கப் பணி எப்பொழுதும் சமுதாயத்தில் வெளிப்பட வேண்டும். அவர்கள் இப்பணியில் முன்னேறிச் சென்ற தூய அடியார்களோடு இணைக்கப்படுவர். மேலும் என்றென்றைக்கும் அவர்கள் மீது இறைவனின் கருணை இருக்கும்.

இவ்வழிகாட்டல்களின் படி வஸிய்யத் செய்த ஒவ்வொருவரும், அவர்கள் என்றைக்குமான நற்கூலிக்கு உரியவர்களாக ஆவர் என்ற பெரும் நற்செய்தி உள்ளது,



மேலும் அவர்களுடைய இந்த பொருள் தியாகம், அவர்களது மரணத்திற்குப் பிறகும் நற்கூலியை ஈட்டித் தருவதாக அமையும். மேலும் தொடரும் ஸதகாவைப் போன்று அதன் அருள் விரிவடைந்ததாக இருக்கும். வஸிய்யத் திட்டம், ஆன்மீக முன்னேற்றம் மற்றும் வெற்றிக்கான அமைப்பு மட்டுமல்ல, மாறாக ஒரு மாபெரும் பொருளாதார அமைப்பினையும் தன்னகத்தே கொண்டுள்ளது. வஸிய்யத் செய்ததும் வஸிய்யத் செய்தவரால் வக்ஃப் செய்யப்பட்ட தொகை ஒருபுறம் சமுதாயத்தில் மார்க்க வெளியீட்டிற்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் பயன்படுத்தப் -படுகிறது. மறுபுறம் பொருளாதார ரீதியாக முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கிறது. பொருளாதார சீர்குலைவுக்கு மிகப் பெரும் காரணம் சில மனிதர்கள் பெரும் பணக்காரர்களாக இருப்பதும், பெரும்பாலோர் மிகவும் ஏழையாக இருப்பதும்தான். இதன் காரணத்தால் சமுதாயத்தில் அமைதியின்மை ஏற்படுகிறது. ஏழ்மையின் காரணத்தால் மக்கள் பல தகாத செயல்முறைகளை கையாண்டு தங்களது மற்றும் தங்களுடைய குடும்பத்தினர்களது வயிற்றை வளர்க்கின்றனர், இதன் காரணத்தினால் குற்றமும் குழப்பமும் சமுதாயத்தில் மேலோங்குகிறது. ஆனால் வஸிய்யத் திட்டம் ஒட்டு மொத்த மனிதர்களையும், நடுநிலையைப் பேணுவதன்பால் கவனமூட்டும் அதே வேளையில் தேவையுடையவர்களின் தேவைகளையும் இத்தொகையின் மூலமாக முழுமையடையச் செய்கிறது. இதில் விதவைகள் மற்றும் அநாதைகளுக்கு உதவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது. வஸிய்யத் திட்டம் எப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த பொருளாதார அமைப்பு என்றால், இதன் மூலமாக உலகின் அனைத்து பொருளாதார மற்றும் சமூக சிக்கல்களுக்கு தீர்வு காண முடியும்.

ஆகவே, இத்திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் அருள்களைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) கூறுகின்றார்கள் "வஸிய்யத் திட்டம் முழுமையடைகின்றபோது அதனால் தப்லீக் மட்டுமின்றி இஸ்லாத்தின் நோக்கத்திற்கேற்ப ஒவ்வொரு தனி மனித தேவைகளும் முழுமை செய்யப்படும். துன்பம் மற்றும் பஞ்சம் உலகை விட்டும் அழிக்கப்படும் - இன்ஷா அல்லாஹ்! அனாதை பிச்சை எடுக்கமாட்டார். விதவை, மக்கள் முன் கையேந்த மாட்டார். ஒன்றுமற்றவர் கவலையுற்று திரிய மாட்டார். ஏனென்றால் வஸிய்யத் குழந்தைகளின் தாயாக இருக்கும். இளைஞர்களின் தந்தையாக இருக்கும், பெண்களின் துணைவனாக இருக்கும். கட்டாயத்திற்குள்ளாகாமல் அன்பு மற்றும் மன மகிழ்ச்சியுடன் ஒரு சகோதரர் சக சகோதரருக்கு இதன் மூலமாக உதவுவார். மேலும் அவர் கொடுப்பது பலனின்றி போகாது. மாறாக கொடுக்கும் ஒவ்வொருவரும் இறைவனிடம் இருந்து சிறந்த கூலியைப் பெறுவர். பணக்காரரும் இழப்பிற்காளாக மாட்டார்; ஏழையும் இழப்பிற்காளாக மாட்டார். ஒரு சமுதாயம் மற்ற சமுதாயத்துடன் சண்டையுமிடாது. மாறாக அதன் நன்மை உலகெங்கும் விரிவடையும்.

எனவே, நண்பர்களே உலகின் புதியதொரு அமைப்பினை மிஸ்டர் சர்ச்சிலாலும் உருவாக்க முடியாது, மிஸ்டர் ரூஸ்வெல்டாலும் உருவாக்க முடியாது. இந்த அட்லாண்டிக் சார்ட்டரின் வாதங்கள் எல்லாம் ஏமாற்று வேலையாகும். அவற்றில் பல்வேறு குறைகள் இருக்கின்றன. பல பிழைகளும், இழப்புகளும் உள்ளன. புதியதொரு அமைப்பினை இறைவன் புறமிருந்து அனுப்பப்படுகின்றவர்கள்தான் கொண்டு வருவர். அவர்களது உள்ளத்தில் செல்வந்தர்களோடு பகைமையும் இருக்காது, ஏழைகளிடம் அதீத நேசமும் இருக்காது. மேலை நாட்டவராகவும் இருக்கமாட்டார்கள் கீழை நாட்டவராகவும் இருக்கமாட்டார்கள். அவர்கள் இறைவனுடைய தூதுவராக இருப்பர். மேலும் அமைதியை நிலைநிறுத்துவதன் உண்மையான வழிமுறைகளின் போதனையையே கொண்டு வருவர். ஆகவே, இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாயிலாக வந்த போதனையே அமைதியினை நிலை பெறச் செய்யும். மேலும் அதன் அடிக்கல் "அல் வஸிய்யத்தின்" வாயிலாக 1905 -ஆம் ஆண்டு வைக்கப்பட்டு விட்டது. உலகம் வெற்றியின் வழியில் செல்ல விரும்புகிறதென்றால் அதற்கான ஒரே வழி அல் வஸிய்யத்தினால் எடுத்து வைக்கப்பட்ட திட்டம் உலகில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். (நிஸாமே நவ், அன்வாருல் உலூம் பாகம் 16 பக்கம் 601)

வஸிய்யத் திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) தன்னுடைய வரலாற்றுச் சிறப்புமிக்க உரையான 'நிஸாமே நவ்' -ல் வஸிய்யத் திட்டத்தை உலகின் மற்ற திட்டங்களை விட மேன்மையான -தாகவும், தூய்மையானதாகவும், சிறப்புவாய்ந்ததாகவும் எடுத்துரைத்துள்ளார்கள்.

முதலாவது, எல்லா மனிதர்களது தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். இரண்டாவது, தனி மனிதத்துவம் மற்றும், குடும்ப வாழ்க்கையின் மென்மையான உணர்வுகள் அழிந்து விடக் கூடாது. மூன்றாவது, இப்பணியை செல்வந்தர் -களிடமிருந்து பலவந்தமாக அல்லாமல் சுய விருப்பத்துடன் பெற வேண்டும். நான்காவது, இத்திட்டம் தேசிய மயமாக மட்டுமின்றி சர்வதேசமயமாகிவிட வேண்டும்.

வஸிய்யத் திட்டம் கிலாஃபத் அமைப்பை விட்டும் வேறுபட்டதல்ல. மாறாக ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள்

ஆகும். கிலா∴பத் அமைப்பு இருப்பதனால்தான் வஸிய்யத் திட்டமும் நிலைத்திருக்கின்றது. இல்லாவிடில் உலகியல் தலைவர்களால் உலகில் உருவாக்கப்படுகின்ற பல்வேறு பொருளாதார திட்டங்கள் சில நாட்களிலேயே பயனற்றுப் போய் விடுகின்றன.


ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இறப்பிற்குப் பிறகு மு∴மின்களின் ஜமாஅத்தில் நிலை பெற இருந்த மகத்துவம் வாய்ந்த கிலா∴பத் அமைப்பைப் பற்றியும் தெளிவான வாசகங்களால் அறிவிப்பு செய்தார்கள். “கிலா∴பத் அமைப்பு மற்றும் வஸிய்யத் திட்டம் உண்மையில் ஒன்று மற்றொன்றுடன் பிரிக்கப்பட முடியாத அளவுக்கு ஒன்றிணைந்துள்ளன.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா) அவர்கள் இவ்வுண்மையின்பால் கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ‘அல் வஸிய்யத்’ நூலில் இரு விஷயங்களை எடுத்துரைக்கிறார்கள்: ஒன்று அன்னாரின் வ∴பாத்திற்குப் பிறகு கிலா∴பத் தோன்றுவது மற்றொன்று, தனது மரணத்தருவாயில் ஜமாஅத்தினர்-களிடையே இறையச்சமும் அவர்களில் முன்னேற்றத்தையும் ஏற்படுத்தும் ஒரு திட்டத்தை ஏற்படுத்துவதைப் பற்றிய கவலை எழுந்தது. மேலும், மற்ற பொருள் தியாகங்களில் முன்னேறுபவர்களையும் பின்தங்குபவர்களையும் பிரித்தறியும் ஓர் அமைப்பை நிறுவ வேண்டியும், ஜமாஅத்தின் பொருட் தேவைகளும் சிறப்பான முறையில் முழுமைப்படுத்துவதற்கேற்ற ஓர் அமைப்பைப் பற்றியும் சிந்தித்தார்கள். எனவேதான் வஸிய்யத் திட்டத்தை ஏற்படுத்தினார்கள்.

இதனடிப்படையில் என்னைப் பொருத்தவரை கிலா∴பத் மற்றும் வஸிய்யத்திற்கிடையே ஆழமான தொடர்பு உள்ளது. வஸிய்யத் திட்டத்தை எந்த அளவு செயல்படுத்த வேண்டும் என்றால் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு இறையச்சத்தின் தரம் வீழ்வதற்குப் பதிலாக அது நிலைத்திருப்பதோடு மட்டுமின்றி வளர்ச்சியடையவும் வேண்டும். மேலும் தன்னுள் ஆன்மீக மாறுதல்களை உருவாக்கும் நபர்களும் தோன்றிக் கொண்டிருக்க வேண்டும். அதாவது இறைவனுக்குரிய உரிமைகள் மற்றும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்துபவர்களும் உருவாகி வர வேண்டும். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்ற அடியார்கள் உருவாகிக் கொண்டே இருக்க வேண்டும். இவ்வாறான தரம் நிலை நாட்டப்பட்டு விட்டால் உண்மையான கிலா∴பத்தும் நிலைத்திருக்கும். ஜமாஅத்தின் தேவைகளும் நிறைவேறிக் கொண்டிருக்கும் - இன்ஷா அல்லாஹ்.” (குத்பாத்தே மஸ்ரூர் பாகம் 2 பக்கம் 559)

2004-ஆம் ஆண்டு இங்கிலாந்து மாநாட்டின் நிறைவுரையின் போது கூறினார்கள்: “அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறவும், நன்மைகளைப் பெறுவதற்குமான மற்றொரு வழியும் உள்ளது. அது உங்களை நன்மைகளில் நிலைத்திருக்க வைப்பதிலும், தங்களுக்குள் தூய மாறுதல்களை உருவாக்குவதிலும் உதவியாக இருக்கும். இன்னும் கூறுவதென்றால் இது மிகவும் முக்கியமான பாதையாகும். அதன் வாயிலாக அல்லாஹ்வின் மார்க்கத்தின் வெளியீட்டுப் பணிகளுக்கும் வழி உருவாகிக் கொண்டிருக்கும்.



மேலும் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை செலுத்து-வதற்கும் வழிவகை உருவாகிக் கொண்டிருந்தது. அதுதான் வஸிய்யத் திட்டம். மேலும் இத்திட்டம் இறை நெருக்கத்தைப் பெறும் ஒரு வழியாகும். ஒருவேளை நீங்கள் இறைவனிடம் இருந்து உங்களுக்கென சிறப்புப் பரிசை நாடுகின்றீரகளெனில் இத்திட்டத்தில் இணைந்து விடுங்கள். மேலும் இவ்வாயிலில் நுழைந்து விடுங்கள்.

ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் (அய்யதஹுல்லாஹுத்தஆலா) அவர்கள் இதே உரையில் வஸிய்யத் திட்டத்தில் இணைவதற்காக ஜமாஅத்தினர்களுக்கு குறிப்பாக கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்:

“2005 -ஆம் ஆண்டில் இவ்வமைப்பு நிறுவப்பட்டு நூறு வருடங்கள் ஆகிவிடும் - இன்ஷா அல்லாஹ். நான் இதற்கு முன்னரே கூறியிருந்தேன். 1905 -ஆம் ஆண்டில் அன்னார் (அலை) அவர்கள் இத்திட்டதை ஏற்படுத்தினார்கள். ஆனால் பல இடங்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இந்த

வஸிய்யத் திட்டத்தில் இணைபவர்களுக்கென நற்செய்தியினை வழங்கியுள்ளார்கள். அவர்கள் ஜமாஅத் மக்களின் மீது நல்லெண்ணம் கொண்டவாறு கூறினார்கள். இவ்வாறாக (இத்திட்டத்தின் வாயிலாக) அல்லாஹ்விற்காக தங்களுடைய செல்வங்களை தியாகம் செய்கின்றவர்கள் மற்றும் ஆன்மீகத்தில் முன்னேறுகின்ற மு∴மின்கள் கிடைத்துக் கொண்டே இருப்பார்கள். நிச்சயம் கிடைத்துக் கொண்டே இருப்பார்கள். ஆனால் எப்படிப்பட்ட வேகத்தில் ஜமாஅத்தினர்கள் இவ்வமைப்பில் இணைய வேண்டியுள்ளதோ அவ்வாறு நடக்கவில்லை. அடுத்த வருடம் இன்ஷா அல்லாஹ் வஸிய்யத்தின் இவ்வமைப்பு நிறுவப்பட்டு நூறு ஆண்டுகள் ஆகி விடும். என்னுடைய விருப்பம் மற்றும் நான் செயல்படுத்த விரும்புவது யாதெனில் இந்த இறைதிட்டத்தில், உங்களுடைய வாழ்வினை தூய்மைப்படுத்துவதற்காகவும், உங்களுடைய சந்ததிகளின் வாழ்வினை தூய்மைப்படுத்துவதற்காகவும் இணைய வேண்டும். முந்திச் செல்லுங்கள். இந்த ஓர் ஆண்டில் இன்னும் 15,000 புதிய வஸிய்யத் செய்தவர்கள் உருவாக வேண்டும். அப்போதுதான் நூறு ஆண்டுகளில் குறைந்தது 50,000 வஸிய்யத் செய்தவர்கள் இணைந்துள்ளார்கள் என்று நாம் கூற முடியும். ஆக, இறைவனின் மஸீஹின் குரலுக்கு செவிசாய்த்தவாறு தியாகங்களின் மேன்மையான தரத்தினை நிலைநாட்டிய மு∴மின்கள் உருவாகி -யுள்ளனர் என்று கூற முடியும். என்னுடைய விருப்பம் என்னவென்றால் 2008 -ஆம் ஆண்டில் இன்ஷா அல்லாஹ் கிலா∴பத் நிலைபெற்று நூறு ஆண்டுகள் ஆகி விடும். அப்போது உலகின் எல்லா நாடுகளிலும் எல்லா ஜமாஅத்துகளிலும் சம்பாதிக்கின்ற. சந்தா கொடுக்கின்றவர்களும் குறைந்தபட்சம் ஐம்பது சதவீதம் பேர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இந்த மகத்துவமிக்க திட்டத்தில் இணைந்திருக்க வேண்டும். மேலும் ஆன்மீகத்தை மேம்படுத்தியவர் -களாகவும், தியாகத்தின் உயர் தகுதியை நிலைநாட்டியவர்களாகவும் உருவாகியிருக்க வேண்டும். இதுவும், ஜமாஅத்தின் சார்பாக கிலா∴பத் நூறு ஆண்டுகள் நிறைவு பெற்றதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தும் வகையில் அல்லாஹ்விற்கு செலுத்துகின்ற அற்ப நேர்த்திக் கடனாக இருக்கும். மேலும் இதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுவதைப் போன்று இத்திட்டத்தில் நல்ல முடிவைப் பற்றி கவலை கொண்டு, வணக்கங்களை செய்கின்ற மக்கள் இணைய வேண்டும். குத்தாமுல் அஹ்மதிய்யா, அன்ஸாருல்லாஹ்வின் இரண்டாவது அணி மற்றும் லஜ்னா இமாயில்லாஹ் இதில் முந்தியவாறு பங்கு பெற வேண்டும். அஹ்மதி இளைஞர்களும், பெண்களும் இதில் முழு முயற்சி மேற்கொள்வார்கள் என நம்புகிறேன். மேலும் அத்துடன் குறிப்பாக நான் பெண்களிடம் கூறுகிறேன், உங்களோடு சேர்த்து உங்கள் கணவரையும், பிள்ளைகளையும் இந்த மேன்மையான புரட்சித் திட்டத்தில் இணைக்க முயற்சி செய்யுங்கள். எனவே சிந்தியுங்கள், கவனம் செலுத்துங்கள், உங்களது சோம்பல் மற்றும் கவனக்குறைவிற்காக இஸ்திக்∴பார் செய்தவாறும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குரலுக்கு செவிசாய்த்தவாறும் விரைவில் இந்த வஸிய்யத் திட்டத்தில் இணைந்து விடுங்கள். மேலும் தங்களை தாங்களே காப்பாற்றிக் கொள்ளுங்கள். உங்களுடைய சந்ததிகளையும் காப்பாற்றுங்கள். அல்லாஹ்வின் அருள்களிலிருந்து பங்கு பெறுங்கள். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக. ஆமீன்! ஹுஸூர் (அய்யதஹுல்லாஹுத்தஆலா அவர்களின் இந்த வழிகாட்டல்களுக்குப் பிறகு அஹ்மதிகளின் ஜமாஅத் 'லப்பைக்' என்று கூறியவாறு அந்த வழிகாட்டல்களை நிறைவேற்றினார்கள்.

இந்த மேற்கோள்களிலிருந்து வஸிய்யத்தின் இரண்டு மாபெரும் அருள்கள் உள்ளன என தெரிய வருகிறது. ஒன்று மனிதனின் ஆன்மீக, மார்க்க, நல்லொழுக்க சீர்திருத்தமும், இறை நெருக்கத்தில் முன்னேற்றமாகும். இரண்டாவது பொருள் தியாகத்தினால் பொருளாதார அமைப்பை சீர்படுத்துதல், மற்றும் தேவையுடையவர்களின் தேவைகளை இவ்வருமானத்தினால் முழுமை செய்வது, மற்றும் உலகினை துன்பம் மற்றும் துயரங்களிலிருந்து வெளியேற்றி அதில் அமைதி மற்றும் சமாதானத்தை நிலைநாட்டுவதுமாகும்.




வஸிய்யத் அமைப்பு உண்மையில், உலகின் புதியதொரு பொருளாதார அமைப்பின் அடிப்படையாகும். மேலும் வஸிய்யத் திட்டத்தின் அருள்களுள் முக்கியமான அருளாகும். எனவே உலகின் புதியதொரு அமைப்பு மேற்கிலிருந்து வடிவமைக்கப்படாது என்ற வாதம் காரணமின்றி கூறப்படவில்லை மாறாக, அதன் அடிக்கல் காதியானின் தூய மண்ணில் 1905 -ஆம் ஆண்டு வைக்கப்பட்டு விட்டது. தற்போது உலகிற்கு அமைதி மற்றும் நிம்மதியை கொடுக்கக் கூடிய அமைப்பு, அனைத்து துன்பங்கள் மற்றும் துயரங்களிலிருந்து இரட்சிப்பை வழங்கக் கூடிய அமைப்பு அனைத்து பணக்கார மற்றும் ஏழைகளின் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் அமைப்பு, ஒவ்வொரு விதவை மற்றும் அநாதையின் மீதும் தந்தையின் நேசத்தைக் காட்டும் அமைப்பு எதுவெனில் காலத்தின் இமாமான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக செயல்படுத்தப்பட்ட அமைப்பே ஆகும்.

(தொடரும்....)

# ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கை 4



மவ்லவி S. அப்துல் காதிர்



முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மனித குலத்திற்கு நற்செயல்களைக் கற்றுக் கொடுக்க வந்த நாதர் ஆவார்கள். "செயல்கள் அனைத்தும் எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டவை" என்று கூறினார்கள். நற்செயல்களின் விளைவுகள் நன்மையாகவும், தீய செயல்களின் விளைவுகள் தீயதாகவும் அமையும் என்றார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளில் அன்பு, மென்மை, எளிமை மற்றும் நல்ல அறிவுரைகள் போன்ற நற்குணங்கள் காணப்படுகின்றன. அதேப் போன்று கடினமாக இருக்க வேண்டிய இடத்தில் கண்டிப்புடனும் இருந்திருக்கிறார்கள்.


நம்பிக்கைக் கொண்டவர்களே! நரக நெருப்பில் இருந்து உங்களையும் உங்கள் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். (66:7) என்ற இறைவனின் கட்டளைக்கேற்ப நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிறருக்கு போதனை செய்வற்கு முன் முதலில் தாம் அந்த போதனையின்படி வழிநடந்தார்கள். பின்னர் தம் குடும்பத்தினருக்கு வலியுறுத்தினார்கள். அதன் அழகு மற்றும் நல்ல விளைவுகளைக் கண்ட மற்றவர்கள் தாமாகவே அதன் பக்கம் ஈர்க்கப்பட்டார்கள். மேலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் மனமுவந்து நற்செயல்களைக் கற்றுக் கொண்டார்கள். இதன் விளைவாக நற்செயல்களின் நறுமனம் நாலா திசைகளிலும் பரவியது. நற்செயல்களை செய்வதை கூட நடுநிலையோடு செய்யும் போதுதான் அது நல்ல செயலாக இருக்கும். தேவையற்ற வீண் சிரமங்களை மேற்கொள்வது ஏற்புடையதல்ல என்பதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தம் போதனைகளில் எடுத்துரைத்தார்கள்.

ஒரு காட்டரபி நான் ஹிஜ்ரத் செய்து மதீனாவுக்கு இடம்பெயரந்து வந்து விடுகிறேன், இதற்கு தாங்கள் எனக்கு அனுமதி தர வேண்டும் என்று வேண்டினார். பொதுவாக காட்டரபிகள் நகர்புரத்திற்கு ஏதேனும் அத்தியாவசிய தேவைகள் இருந்தாலொழிய வர மாட்டார்கள். நகர்புற வாழ்க்கை என்பது காட்டரபிகளுக்கு மிகவும் கடினமாக இருக்கும். எனவே, இவரால் ஹிஜ்ரத்தில் நிலைத்து நிற்க முடியாது என்பதை அறிந்த நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸக்காத் செலுத்தும் அளவுக்கு உம்மிடம் ஒட்டகங்கள் இருக்கின்றதா? என்று கேட்டார்கள். அதற்கு அந்த மனிதர் ஆம்! என்னிடம் ஒட்டகங்கள் இருக்கின்றன என்றார். அப்படி என்றால் நீர் மலைக்குப் பின்பக்கம் இருந்து கொண்டே நற்செயலாற்றுவீராக! அல்லாஹ் உமது நற்செயல்களுக்கான கூலியில் சிறிதும் குறைக்க மாட்டான் என்றார்கள். (புகாரி)

வீட்டில் வயோதிக பெற்றோர் இருக்க ஜிஹாதில் கலந்து கொள்ள வந்த இளைஞரை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "நீர் சென்று உமது பெற்றோருக்கு பணிவிடை செய்வீராக. இது நீர் ஜிஹாதில் கலந்து கொள்வதை விட அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானது" என்று கூறி அனுப்பி விட்டார்கள்.

நல்ல எண்ணங்களின் அடிப்படையில் அமையக் கூடிய செயல்கள் கூட மனிதன் தன் சொந்த விருப்பத்திற்கு செய்யாமல் இறைவனின் திருப்தியை முன்னிறுத்தி செய்ய வேண்டும். அதுவே மனிதனின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதை இதன் மூலம் உணர்த்தினார்கள்.

யார் என்ன தவறு செய்தாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன் உறவினர் அல்லது அந்நியர் என்ற எந்தப் பாகுபாடும் பாராமல் அந்த நபருக்கு நல்லுபதேசம் செய்வார்கள். ஆனால், இடம் பொருள் ஏவல் அறிந்து அதனை செய்வார்கள். மது ஹராமாக்கப்படுவதற்கு முன் ஒருமுறை சிலர் மது குடித்து விட்டு ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் ஓர் ஒட்டகத்தைக் கொன்று விட்டனர். இது குறித்து அலி (ரலி) அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சொன்ன போது, அதன் உண்மையை விசாரிக்க நேரில் சென்றார்கள். அப்போது அந்த ஒட்டகத்தைக் கொன்ற -வர்களில் அவர்களின் தந்தையின் சகோதரர் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களும் உடந்தையாக இருப்பதை அறிந்து அவர்களுக்கு புரிய வைக்க நாடினார்கள். ஆனால் அவர்கள் மது போதையில் இருப்பதைக் கண்டு ஒன்றும் சொல்லாமல் திரும்பி வந்து விட்டார்கள். (புகாரி)



ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணத்தின் போது ஓரிடத்தில் கூடாரமிட்டுக் கொண்டிருக்கும் வேளையில் மக்கள் ஒரு நபருக்கு நிழலுக்காக துணியை ஏந்திப் பிடித்தவாறு கூட்டமாக நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். அங்கே என்ன கூட்டம்? என்று விசாரித்தார்கள். அவர் நோன்பு வைத்திருப்பதாக மக்கள் கூறினர். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணத்தின் போது நோன்பு வைப்பது நற்செயல் அல்ல என்றார்கள். (புகாரி)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது அர.ஃபாவிலிருந்து மினா செல்லும் வழியில் மக்கள் தங்களின் வாகனங்களை வேகமாக ஓட்டிக் கொண்டு வந்தனர். இதனைக் கண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களே! சவாரிகளை வேகமாக விரட்டுவது நற்செயல் அல்ல. மிதமான வேகத்தில் ஓட்டுங்கள் என்றார்கள். (புகாரி)

நற்செயல்களை இறைவனின் விருப்பத்தை நாடியவாறு செய்ய வேண்டுமே அல்லாமல் ஒருவருக்கொருவர் போட்டி மனப்பான்மையை வளர்ப்பதற்காக செய்வது நன்மையல்ல என்பதை எப்போதும் புரிய வைத்திருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின் -றார்கள்: வழக்கமாக ரமலானின் இறுதி பத்து நாட்களில் இ.ஃதிகா.ஃப் இருப்பதற்காக நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் தமக்கு கூடாரம் கட்டும்படி கூறுவார்கள். நான் அவர்களுக்காக கூடாரம் கட்டினேன். ஹஸ்ரத் ஹ.ஃப்ஸா (ரலி) அவர்கள் என்னிடம் கேட்டு தனக்காக ஒரு கூடாரத்தை அமைத்துக் கொண்டார்கள். இதனைப் பார்த்த ஹஸ்ரத் ஸைனப் பின்த் ஹஜஷ் (ரலி) அவர்களும் தமது கூடாத்தை அமைத்துக் கொண்டார்கள். காலையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல கூடாரங்களைக் கண்டதும் இவை யாருடைய கூடாரங்கள்? என்று கேட்டார்கள். இவை தங்களின் மனைவியர்களின் கூடாரங்கள் என்று சொல்லப்பட்டது. இதைக் கேட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோபமுற்றார்கள். ஒருவரைப் பார்த்து இன்னொருவர் போட்டியிடுவதுதான் நன்மை என்று நீங்கள் நினைக்கின்றீர் -களா? என்று கூறினார்கள். பின்னர் அந்த வருடம் ரமலான் மாதம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இ.ஃதிகா.ஃப் இருக்கவில்லை. (புகாரி)

மக்களே! எப்போதும் மகிழ்ச்சியும் நற்செய்தியும் அடங்கிய கருத்துக்களையே பேசுங்கள். வெறுப்பை உண்டாக்கும் பேச்சுக்களை பேசாதீர்கள் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுவார்கள். இதன் காரணமாக அவர்கள் மக்களுக்கு அடிக்கடி அறிவுரை கூறுவதை விடுத்து இடைவெளி விட்டு அறிவுரை கூறி வந்தார்கள். இதனால் அவர்களின் அறிவுரைகளைக் கேட்கும் மக்கள் வெறுப்படைய மாட்டார்கள்.

எப்போதும் இறைவனின் அன்பையும் விருப்பத்தையும் பெறுவதுதான் உண்மையான நன்மை என்பதை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் நடைமுறையில் காட்டியே வந்திருக்கின்றார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைநேசர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) கூறுகின்றார்கள்: எல்லா நன்மைகளுக்கும் ஆணிவேர் தக்வா எனும் இறையச்சமே ஆகும். இந்த தக்வா இருந்தால் எல்லாம் இருக்கின்றது. (இது இல்லையேல் ஒன்றுமில்லை).

(தொடரும்....)

# இறை மன்னிப்பின் காட்சிகள்

### - - - ஹஸ்ரத் மீர் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் (ரலி) - - -

5

**தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது**

(இறுதி தீர்ப்பு நாளின் போது இறைமன்னிப்பின் தோற்றம் வெளிப்பட்ட குறிப்பட்ட ஒரு நாளில் மக்களின் செயல்களின் கணக்குகள் பரீசீலிக்கப்படும் பரந்த மைதானத்தில் கு:.்ப்ரான் என்னும் மலக்கு என்னை அழைத்துச் செல்கிறார். அங்கு இறைமன்னிப்பின் பல்வேறு காட்சிகளை நாங்கள் பார்த்துக் கொண்டே சென்று கொண்டிருக்கிறோம்.)





27) நான் அங்கு பார்த்தேன். எவர்கள் பூமியில் தங்களது பாவங்களுக்காக தண்டனை பெற்றிருந்தார்களோ அவர்கள் சிறப்பான பரிவுடனும் கனிவுடனும் நடத்தப்பட்டனர் உதாரணமாக, ஒரு மனிதர் இருந்தார். அவர் மிகப்பெரும் பாவம் ஒன்றை செய்திருந்தார். எனவே அவர் தாமே தனது ஆட்சியாளிடம் சென்று நான் இப்படி ஒரு தீய செயல் செய்து விட்டேன். நான் அதற்காக மிகவும் வருந்துகிறேன். அல்லாஹ்விடம் மன்னிப்பும் கேட்டேன். எனினும் இதற்காக தண்டனை மறுமையில் தரப்படுவதை விட இந்த உலகிலே தரப்பட்டுவிட வேண்டும் என்றே நான் விரும்புகிறேன் என்றார். அதன் காரணமாக அவர் கல்லாலடித்துக் கொல்லப்பட்டார். மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. நியாயத் தீர்ப்பு நாளில் இந்த மனிதனை அல்லாஹ்விடம் கொண்டு வந்தார்கள். அல்லாஹ் கூறினான்: 'எனது அடியானே! உனது தவ்பாவில் நாம் திருப்தி அடைந்தோம். உனது வருத்தமும் தவ்பாவும் ஒரு முழு நகருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டால், அங்குள்ள அனைவரையும் நாம் அதைக் கொண்டு மன்னித்து விட முடியும்.' இவ்வாறு அந்த மனிதனுக்கு அல்லாஹ்வின் தரப்பிலிருந்து ஆறுதலும் திருப்தியும் வழங்கப்பட்டது.

28) பிறகு ஒரு கொடுங்கோல் ஆட்சியாளருடைய வழக்கு வந்தது. அவர் தனது குடிமக்கள் பலருக்கு தீமை செய்திருந்தார். அவரால் நசுக்கப்பட்ட அத்தனை மக்களும் அவருடன் எவ்வாறு நடந்து கொள்ளப்படும்? என்ன தண்டனை தரப்படும்? என்பதை அறிய ஆவலுடன் நின்றிருந்தனர். ஆனால் இந்த கொடுமை நிறைந்த ஆட்சியாளர் தனது கடைசி நாட்களில் தனது கொடுமைகளுக்கு தவ்பா செய்தார் என்றும் அதற்காக அவர் மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து வந்து அங்கேயே மரணமடைந்தார் என்றும் மக்களுக்கு கூறப்பட்டது. அதைக் கேட்ட மக்கள் அவர் அவர்களுக்கெதிராக செய்த எல்லா வரம்பு மீறல்களையும் மன்னித்து விடுவதாக அறிவித்து அல்லாஹ்விடமும் அவரை மன்னிக்கும்படி வேண்டினர். எனவே அவரும் முகத்தில் புன்முறுவல் தவழ சுவர்க்கம் நோக்கி சென்றார்.

29) இலட்சக்கணக்கான மக்கள் இவ்வாறு மன்னிக்கப்பட்டனர். அவர்களால் தீங்கிழைக்கப்பட்டவர் -களுக்கு அல்லாஹ் பன்மடங்கு நற்கூலி தந்த போது, தீங்கிழைக்கப்பட்ட அவர்கள் தங்கள் மீது வரம்புமீறியவர்களை மன்னித்ததுடன் அவர்களுக்காக அல்லாஹ்விடம் அவர்களை மன்னிக்குமாறும் வேண்டினர். இவ்வாறு வரம்புமீறியவர்களும் வரம்புமீறப்பட்டவர்களும் மன்னிக்கப்பட்டனர். எவர்களிடம போதுமான நற்செயல்கள் இல்லையோ அவர்கள், அவர்களின் பெற்றோர்கள் அவர்களிடம் மகிழ்ச்சியுடன் இருந்த காரணத்தால் மன்னிக்கப்பட்டனர். இதற்காக பின்பற்றப்பட்ட விதி இதுவாகும். அதாவது, 'அல்லாஹ்வின் மகிழ்ச்சி பெற்றோரின் மகிழ்ச்சியில் உள்ளது.'

30) எனக்கு மிகவும் ஆச்சர்யமான சம்பவம் இரண்டு நபர்களை குறித்ததாகும். இருவரும் ஓரிடத்தில் நின்று கொண்டிருந்தனர். நரகிற்கு அவர்கள் இழுத்துச் செல்லப்பட வேண்டும். அப்போது அவர்கள் மன்னிக்கப்பட்ட ஒரு நபர் சுவர்க்கத்தினுள் நுழைவதைப் பார்த்தார்கள். அவ்விருவருள் ஒருவர் அவரைப் பார்த்து கூறினார்: 'சகோதரரே! என்னை நினைவு இருக்கிறதா? நான் உமக்கு இன்ன இடத்தில் தண்ணீர் தந்தேன்.' இரண்டாவது நபரும் அந்த மனிதரைப் பார்த்து கூறினார்: 'சகோதரரே! என்னையும் உமக்கு நினைவிருக்கும் என்று எண்ணுகிறேன். நீர் உளு செய்வதற்காக உமது பாத்திரத்தை தண்ணீரால் நிரப்பியவன் நானே! இப்போது பாரும்! நீர் சுவர்க்கத்திற்கு செல்கிறீர். நாங்கள் இருவரும் நரகத்திற்கு செல்ல இருக்கிறோம்.' இதைக் கேட்ட மன்னிக்கப்பட்ட அந்த நபரின் உள்ளம் உருகியது. அவர் அங்கேயே அப்போதே கருணைமிக்க அல்லாஹ்விடம் அவ்விருவருக்காக துஆ செய்யத் தொடங்கினார். அப்போது அவரிடம் அவ்விருவரையும் அழைத்துக் கொண்டு சுவர்க்கம் செல்லுமாறு கட்டளை இடப்பட்டது.

31) நாங்கள் இந்த காட்சிகளில் மூழ்கி இருந்தபோது திடீரென நரகத்திலிருந்து பெரும் சப்தம் கேட்டது. இரண்டு பேர் இந்த சப்தம் எழுப்பிக் கொண்டிருப்பதாக கூறப்பட்டது. அவ்விருவரையும் அல்லாஹ்வின் முன் கொண்டு வருமாறு கட்டளையிடப்பட்டது. அவர்கள் வந்ததும், 'நீங்கள் ஏன் இந்த அளவு சப்தம் எழுப்பிக் கொண்டிருக்கின்றீர்கள்?' என்று கேட்கப்பட்டது. அப்போது அவர்கள், 'எங்கள் இறைவா! நாங்கள் எரிந்து கொண்டிருக்கிறோம். இந்த வலியையும் தண்டனையையும் எங்களால் தாங்க முடியவில்லை. எனவே எங்கள் மீது கருணை காட்டுவாயாக!' அப்போது அல்லாஹ் கூறினான்: 'சரி, இப்போது நீங்கள் நரகத்தில் உங்கள் இடத்திற்கு செல்லுங்கள். உங்களைக் குறித்து பின்னர் நாம் முடிவு செய்வோம்.' பிறகு அவ்விருவருள் ஒருவன் நரகத்திற்கு திரும்பி விட்டான். மற்றவன் அங்கேயே நின்று கொண்டு இருந்தான். பிறகு அவன் கூறினான்: 'என் இறைவா! நீ என்னை நரகிலிருந்து வெளியில் வருமாறு அழைத்தது மீண்டும் என்னை அங்கே அனுப்பு-வதற்குத்தானா?' என்று கேட்டான். அவன் இவ்வாறு கேட்டதும் அங்கு நின்று கொண்டிருந்த அனைவரும் சிரித்து விட்டனர். அல்லாஹ் கட்டளையிட்டான்: 'சரி, பொறுமையிழந்தவனே செல்! நாம் உன்னையும் மன்னித்து விட்டோம் உனது நண்பனையும் மன்னித்து விட்டோம்.'



32) பிறகு நாங்கள் முன்னேறி சென்றோம். அங்கு நபி (ஸல்) அவர்களின் சஹாபிகள் சிலரது கணக்குகள் விசாரிக்கப்பட்டன. ஹாதிப் என்பவரது முறை வந்தது. அவரைக் குறித்து சில சாட்சிகள் இவ்வாறு கூறினர். 'இவர் இஸ்லாத்திற்கு எதிராகவும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் துரோகமிழைத்தவர். எனவே அதற்கு தண்டனையாக உலகில் மரணதண்டனையும் மறுமையில் நரகமும் விதிக்கப்பட வேண்டும்.' மேலும் கூறினர்: 'இவர் நபி (ஸல்) அவர்களின் தாக்குதல் திட்டம் குறித்து மக்காவின் கா∴பிர்களுக்கு ஒரு கடிதம் மூலம் தெரிவிக்க முனைந்தார். அந்த திட்டம் ஓர் அரசாங்க இரகசியம். இது வெளிப்படுத்தப்பட்டிருந்தால் முஸ்லிம்களின் அழிவுக்கு அது காரணமாக அமைந்திருக்கும். அல்லாஹ் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு இது குறித்து சரியான தருணத்தில் அறிவிக்காமலிருந்தால், மக்கா வெற்றிக்கான முழு திட்டமும் தோல்வியுற்றிருக்கும். எனவே இவர் மிகப் பெரும் துரோகி ஆவார்' என்று கூறினர். அப்போது அல்லாஹ் தனது அரியாசனையிலிருந்து கூறினான்: 'நீங்கள் சொல்வது சரிதான். ஆனால் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு பத்ர் போரில் கலந்து கொண்ட சஹாபிகள் தொடர்பாக வெளியிடப்பட்ட நமது ஆணை உள்ளதே! அதனை கவனித்தீர்களா?' என்று கேட்டான். அந்த ஆணை தேடிப் பார்க்கபட்டது. பின்னர் அது சமர்ப்பிக்கப்பட்டது. அதில் கூறப்பட்டிருந்தது.

اِعْمَلُوْا مَا شِئْتُمْ فَاِنِّیْ غَفَرْتُ لَکُمْ 'நீங்கள் எது வேண்டுமானாலும் செய்யுங்கள். நான் உங்கள் அனைவரையும் மன்னித்து விட்டேன்.' அதில் மேலும் கூறப்பட்டிருந்தது. 'நம்முடைய அடியார்களின் சில குறிப்பிட்ட சேவைகள் உள்ளன. அவை இதுபோன்று நற்கூலி தருவதற்கு உகந்தவையே.'

பின்னர் அறிவிக்கப்பட்டது. 'ஹாதிப் செல்லட்டும். அவர் பத்ர் சஹாபிகளுடன் மன்னிக்கப்படுகிறார்.'

33) இதன் பிறகு ஷஹீதுகளின் தலைவர், அல்லாஹ்வின் சிங்கம், ஹஸ்ரத் ஹம்ஸா பின் அப்துல் முத்தலிப் (ரலி) அவர்களின் முறை வந்தது. சாட்சிகள் கூறினர்: 'ஒருமுறை இவர் மது அருந்திவிட்டு தனது ஒரு பணிப்பெண்ணின் பாடல்களை கேட்டுக் கொண்டிருந்தார். அவளது பாடலில் மிகவும் மகிழ்ச்சியுற்ற ஹம்ஸா, உனக்கு என்ன வேண்டுமோ கேள்?' என்று கூறினார். அந்தப் பெண் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுடன் ஏற்கனவே பகைமை கொண்டி-ருந்தாள். எனவே அவள் பத்ர் போரின் வெகுமதியாக ஹஸ்ரத் அலிக்கு கொடுக்கப்பட்டுள்ள இரண்டு ஒட்டகங்களின் ஈரல்கள் தனக்கு வேண்டும் என்று கேட்டாள். உடனே ஹம்ஸா அந்த ஒட்டகங்கள் இருந்த இடத்திற்கு சென்று அவற்றின் வயிற்றை கிழித்து அவற்றின் ஈரலை கொண்டு வந்து அப்பெண்ணிடம் கொடுத்தார். வாயில்லா அப்பிராணிகள் துடிதுடித்து இறந்தன.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு இது தெரிய வந்ததும் அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் நடந்ததை கண்ணீர் மல்க கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலியுடன் ஹம்ஸாவை பார்ப்பதற்காக சென்றார்கள். அவர்கள் இருவரையும் பார்த்த ஹம்ஸா 'நீங்கள் இருவரும் எனது தந்தையின் அடிமைகள் அல்லவா?' என்று கேட்டார். அவர் மது மயக்கத்தில் இருக்கிறார் என்பதை அறிந்து கோண்ட நபி (ஸல்) அவர்கள் மேலும் ஏதும் பேசாமல் திரும்பி விட்டார்கள். அப்போது மது அருந்துவது ஹராமாக்கப்பட்டிருக்கவில்லை. பிறகு சில நாட்கள் கழித்து உஹத் போரில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

சாட்சிகள் கூறினர்: 'மனித நேயத்திற்கும் அல்லாஹ்வின் படைப்புகளுக்கும் எதிராக இவர் இழைத்துள்ள அநீதிகளுக்கு நிச்சயமாக தண்டனை தரப்பட வேண்டும். அப்போது மது தடுக்கப்படவில்லை என்ற போதிலும் இவர் செய்த செயல் மிகவும் கொடூரமானது. மனித இயல்புக்கு எதிரானது. எனவே இவர் எந்த மார்க்கத்தை




உற்சாகப்படுத்த அவள் பாடல்கள் பாடினாள்.

இவ்வளவு இருப்பினும், ஹம்ஸா நமது நேசத்திற்குரியவர். எனவே அவரிடம் நாம் பழிவாங்கியது கூட அவருக்கு நற்கூலியையே பெற்றுத் தந்தது. ஷஹீது -களின் தலைவராக அவர் ஆகிவிட்டார். மரணத்திற்குப் பின்னர் அவரது உடல் மீது இழைக்கப்ட்ட எந்த அநீதிகளும் அவருக்கு வலியைத் தரவில்லை. எனவே இன்று நாம் அவரை மன்னிப்பு மற்றும் கண்ணியத்தின் போர்வையால் போர்த்துகிறோம். அவரது அந்தஸ்து உயர்த்தப்படுகிறது. உங்களது கேள்விக்கு உரிய பதில் தரப்பட்டு விட்டது. இப்போது அவரை சுவர்க்கத்திற்கு எடுத்துச் செல்லுங்கள். அவரது உடன்பிறந்தவரின் மகனின் அருகே (அதாவது, நபி (ஸல்) அவர்கள்) அவரது இருப்பிடத்ததை அமையுங்கள். நாம் அவருடன் பொருந்திக் கொண்டோம். அவரும் நம்முடன் பொருந்திக்கொண்டார் என்று அல்லாஹ் கூறினான்.

சேர்ந்தவராக இருப்பினும் இவரது கொடுமைக்கு கூலி கிடைத்தே ஆக வேண்டும்.'

அல்லாஹ் தனது அரியனையிலிருந்து கூறினான்: 'அவரது தவறுக்கு நாம் ஏற்கனவே அவரிடம் பழிவாங்கி விட்டோம். ஹம்ஸா நம்முடைய சிங்கமாவார். அவரிடமிருந்து இச்செயலுக்காக பெறப்பட்ட பரிகாரம் வெளிப்படையாகவே உள்ளது. நாம் அவருக்கு நமது நெருக்கத்தை வழங்கி இருப்பதும் வெளிப்படையானதே. அவரது பணிப்பெண் கேட்டுக் கொண்டதனால் அவர் ஒட்டகங்களை கொன்றார் அல்லவா? எனவே உஹுத் போரில் அவரைக் கொல்வதற்காக மிருகத்தனம் கொண்ட ஓர் அடிமை கூலிக்கு அமர்த்தப் -பட்டான். அவன் அவரது உடலை விலங்குகளின் உடலை கிழிப்பது போன்று கிழித்தான்.

எவ்வாறு ஹம்ஸா அந்த ஒட்டகங்களின் உடல்களில் இருந்து ஈரலை வெளியில் எடுத்தாரோ அப்படியே, அபூசு.்.ப்யானின் மனைவி ஹிந்தா அவரது உடலிலிருந்து ஈரலை வெளியில் எடுத்தாள். எவ்வாறு ஒட்டகங்களின் ஈரல் பொரிக்கப்பட்டு உண்ணப்பட்டதோ, அதைப் போன்று ஹிந்தா உஹுது போர்களத்தில் அவரது ஈரலை அனைவர் முன்னிலையில் மென்று துப்பினாள். கொல்லப்பட்டது இரண்டு ஒட்டகங்கள். எனவே, இரண்டாவது ஒட்டகம் கொல்லப்பட்ட -தற்காக ஹம்ஸாவின் மரணித்த உடல் சேதப்படுத்தப்பட்டது. அவரது மூக்கும், காதுகளும், உதடுகளும் துண்டிக்கப்பட்டு ஒரு மாலையாக கட்டப்பட்டு போர்க்களத்தில் அனைவருக்கும் காண்பிக்கப்பட்டது. அவர் எவ்வாறு நபி (ஸல்) அவர்களை தனது தந்தையின் அடிமை என்று கூறினாரோ அவ்வாறே குரைஷிகளின் சிறப்பிற்குரியவர் அல்ல, மாறாக ஓர் அடிமையே அவரை கொல்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டான்.

தொடர்ந்து அல்லாஹ் கூறினான்: இப்போது கூறுங்கள். அவரது கொடூர செயலின் எந்த அம்சமாவது கூலி தரப்படாமல் விடப்பட்டுள்ளதா? இல்லை. இன்னும் சொல்லப்போனால், இது எந்த அளவுக்கு நடந்தது எனில் ஒட்டகங்கள் கொல்லப்பட்டது ஒரு பாடகியின் பொருட்டே. அவரது உடலை உஹுது போர்களத்தில் சேதப்படுத்திய ஹிந்தாவும் ஒரு பாடகிதான். போர்க்களத்தில் வீரர்களை

34) நாங்கள் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் பற்றிய தீர்ப்பை கேட்ட பிறகு மேலும் முன்னேறிச் சென்றோம். அங்கு ஒரு நம்பிக்கை கொண்டவரைப் பாரத்தோம். அவர் ஷிர்க்கைத் தவிர அனைத்து வகையான பாவங்களையும் செய்திருந்தார். அவர் நரகத்தை நோக்கி இழுத்து கொண்டு செல்லப்படவிருந்தார். அப்போது நாங்கள் ஒரு கம்பீரமான பெரும் சப்தம் ஒன்றை கேட்டோம். அதில் 'எவர் ஒருவர் எனக்கு இணையாக எதையும் ஆக்காதவரை நான் எல்லா பாவங்களையும் மன்னிக்கும் ஆற்றல் பெற்றவன் என்று என்னைக் குறித்து நம்புகிறாரோ அவரை நான் மன்னிப்பேன்' என்று கூறப்பட்டது.

அந்த மனிதனுக்கு பக்கத்தில் இன்னொரு மனிதன் நின்று கொண்டிருந்தான். அவனுடைய பதிவேட்டில் ஒவ்வொரு பக்கத்திலும் பாவங்களும் வரம்பு மீறல்களும் காணப்பட்டன. ஆனால் இடையிடையே அவர் இஸ்திக்.்.பார் செய்ததைப் பற்றிய குறிப்புகளும் அந்த பக்கங்களில் காணப்பட்டன. அப்போது, இன்று அவரது அந்த இஸ்திக்.பார்களின் காரணத்தால் அனைத்து பாவங்களும் துடைக்கப்படுகின்றன என்று கூறப்பட்டது..

35) பின்னர் நாங்கள் பார்த்தோம். ஒரு குருடரைக் குறித்து சர்ச்சை எழுந்தது. அல்லாஹ்வின் அரியாசனையில் இருந்து ஒரு கட்டளை வந்தது. நாம் அவரது நேசத்திற்குரிய இரண்டு கண்களையும் பறித்துவிட்டிருந்தோம். எனவே இன்று அதன் காரணமாக அவர் மன்னிக்கப்படுகிறார்.

36) மேலும் நாங்கள் முன்னே சென்றபோது நோயாளிகள், ஏழைகள் மற்றும் தேவையுடையவர்களின் பெருங்கூட்டத்தைக் கண்டோம். அல்லாஹ் கூறினான்: 'நான் எவரையாவது மன்னிக்க நாடும்போது அவரை சுகவீனம் மற்றும் ஏழ்மையின் சோதனையில் ஆழ்த்தி அதன் மூலம் அனைத்து பாவங்களையும் அகற்றி விடுகிறேன்.' இதனை நான் கேட்டபோது பெரிதும் மகிழ்ச்சி அடைந்தேன். ஏனெனில் என் குழந்தைப் பருவத்தில் அதிகமாக நான் நோயுற்றிருந்தேன்.


சற்று நேரம் கழித்து நான் கு.ஃப்ரானிடம், ‘அல்லாஹ்வின் மன்னிப்பின் சில காட்சிகளைக் கண்டு விட்டேன். ஆனால் இந்த காட்சிகள் இன்னும் கடல் போன்று முடிவு இல்லாமல் காட்சியளிக்கிறது. நான் சற்று களைப்படைந்து விட்டேன். என்னை திரும்ப அழைத்துச் செல்லுங்கள்’ என்று கேட்டுக் கொண்டேன். நானும் கு.ஃப்ரானும் திரும்பி வந்து கொண்டிருந்தோம்.

அப்போது கு.ப்ரான் என்னிடம் இறை மன்னிப்பின் பொதுவான சில விதிகளை கூறிக் கொண்டே வந்தார். அவற்றை நான் கூறுகிறேன்.

1. ஒருவர் தனது நற்செயல்களைக் கொண்டு மட்டும் சுவர்க்கம் சென்று விட முடயாது. அல்லாஹ்வின் பரிவும் கருணையுயும் அதற்கு தேவை.
2. ஒவ்வொரு நற்செயலையும் அல்லாஹ் பெரிதும் மதித்து அதன் கூலியை பன்மடங்காக்கி விடுகிறான்.
3. அல்லாஹ் சுயமே மன்னிப்பவனும் கருணை காட்டுபவனும் ஆவான். அவன் எவரையும் எந்த விசாரணையுமின்றி மன்னித்து விட முடியும். சிலருக்கு எளிதாக கணக்கு கேட்கப்படும். சிலருக்கு முழுமையாக கணக்கு கேட்கப்படும். அவன் நாடியவாறு இதனை செய்வான்.
4. அல்லாஹ்வின் கருணை அவனது கோபத்தை எப்போதும் மிஞ்சி விடுகிறது.
5. அல்லாஹ்வின் ஒவ்வொரு தண்டனையும் ஞானம் நிறைந்தது. சீர்திருத்துவதே அதன் நோக்கமாகும். அது தனிப்பட்ட கோபத்தையோ அதிருப்தியையோ சார்ந்தது அல்ல. நரகமும் சீர்திருத்தத்திற்கான இடமே ஆகும். அது தற்காலிகமானதே; நிரந்தரமானது அல்ல.
6. எவரும் எவரது பாவத்தையும் மன்னிக்க முடியாது. அல்லாஹ் மட்டுமே பாவங்களை மன்னிக்க முடியும்.
7. அல்லாஹ்வின் தீர்ப்பில் அநீதி இருக்காது. அதில் பரிவு, நீதி அல்லது பொருத்தமான தண்டனை இடம்பெறும்.
8. ஒவ்வொரு நற்செயலுக்கும் பன்மடங்கு கூலி தரப்படும். ஆனால் ஒவ்வொரு பாவத்திற்கும் அந்த பாவத்தின் அளவு மட்டுமே பார்க்கப்படும். ஒருவர் நற்செயல் செய்ய எண்ணினால் அதற்கு நற்கூலி உண்டு. ஆனால் ஒருவர் தீமையைச் செய்ய நாடினால் அதற்கு தண்டனை கிடையாது. மேலும் அவர் அந்த தீமையை செய்வதில் இருந்தும் தவிர்ந்து கொண்டால் அதற்கு நற்கூலி உண்டு.
9. இஸ்திக்ஃபார் அல்லாஹ்வால் உடனே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
10. ஒருவர் மற்றவரது பாவமன்னிப்பிற்காக துஆ செய்தால் அது அவ்விருவருக்காகவும் ஏற்றுக் கொள்ளப்படும். மரணித்தவர்களுக்கு நாம் வழங்கும் மிகச் சிறந்த வெகுமதி அவர்களுக்காக துஆ செய்வதாகும்.
11. இவ்வுலகம் மற்றும் மறு உலகின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும் மிக்க மன்னிப்பவனும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வால் சில மலக்குகள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதைப் போன்று அல்லாஹ்வின் அரியாசனையைச் சுற்றி கண்ணியமிக்க மலக்குகள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரின் ஒரே பணி அடியார்களின் பாவங்களுக்காக அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்பதாகும். ஒரு நம்பிக்கை கொண்டவரின் பாவங்கள் மலை அளவு பெரிதாக இருந்தாலும் அல்லது வானம் வரை எட்டக் கூடியதாக இருந்தாலும் அவற்றை மன்னிக்கும விஷயத்தில் அல்லாஹ் வெட்கப் -படுவதில்லை. ஒவ்வொரு நாளும் மனிதகுலத்தின் ஏராளமான பாவங்கள் எந்த காரணமுமின்றி மன்னிக்கப்படுகின்றன.
12. நியாயத் தீர்ப்பு நாளின் போது நபிமார்கள், குறிப்பாக நபிகள் நாயகம (ஸல்) அவர்கள் அதைப் போன்று அவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நல்லடியார்கள் ஆகியோர் நம்பிக்கை கொண்டவர்களுக்காக அல்லாஹ்வின் அனுமதி பெற்ற பின்னர் பரிந்துரை செய்வர். அவர்களது பரிந்துரைகளால் எண்ணற்ற மக்கள் மன்னிக்கப்படுவார்கள். அவர்கள் மட்டுமல்ல, திருக்குர்ஆனும், திருக்குர்ஆனின் சூராக்களும் அடியார்களுக்காக பரிந்துரை செய்யும். அதன் காரணமாகவும் ஏராளமானவர்கள் மன்னிக்கப்படுவர்.
13. பிறகு மிக்க மன்னிப்பவனும் கருணை மிக்கவனுமாகிய இறைவன் நரகத்தை நோக்கி கைகளை நீட்டியவாறு எல்லா பரிந்துரையாளர்களும் பரிந்துரை செய்து முடித்து விட்டனர். இப்போது மிக்க மன்னிப்பனும், மிக்க பரிவு காட்டுபவனும், மிக்க அன்பு செலுத்துபவனும் பரிந்துரைப்பான் என்று கூறுவான். பின்னர் அனைத்து பாவிகளும் நரகிலிருந்து அகற்றப்படுவர். இறை கருணையின் மெல்லிய தென்றல் காற்றினால் நரகின் கதவுகள் அசைந்து கொண்டிருக்கும். அதனுள் எவரும் இருக்க மாட்டார்கள். ஃபிர்அவ்னும் அபுஜஹ்லும் கூட இறை மன்னிப்பின் போர்வைக்குள் வந்து விடுவார்கள். நரகம் அதனுள் இருக்கும் கைதிகளின் சீர்திருத்தம் முழுமையடையம் வரை மட்டுமே அவர்களை தன்னுள் வைத்திருக்கும்.

*(தொடர்ச்சி 23 -ஆம் பக்கம்...)*

“அல்லாஹ், தாயை விட அதிகமாக மன்னிக்கக்கூடியவன் ஆவான். என்னுடைய அடியான் எப்போது பாவமன்னிப்பு கோரி என்னிடம் வருகின்றான். நான் அவனை அதன் மூலம் மன்னிக்க வேண்டும் என அவன் எதிர்பார்க்கிறான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! பாலைவனத்தில் தன்னுடைய தொலைந்துபோன ஒட்டகம் கிடைப்பதனால் மகிழ்ச்சி அடையக் கூடியவனை விட அதிகமாக அல்லாஹ் தன்னுடைய அடியான் பாவமன்னிப்புக் கோரும் போது மகிழ்ச்சி அடைகின்றான்.” (ஜுமுஆ குத்பா – 19.06.2015)




Hazrat Mirza Masroor Ahmad Khalifatul Masih V[aba]

# ‘இஸ்முஹு' அஹ்மது’ என்ற முன்னறிவிப்பிற்கு ஒப்பானவர் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே!

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்
ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)

5

தமிழாக்கம்: மவ்லவி R. அப்துல்லாஹ்



இங்கு நான் மற்றோரு ஆட்சேபனையையும் அப்புறப்படுத்த விரும்புகிறேன். அதாவது சிலர் கூறலாம். ஹஸ்ரத் (மிர்ஸா) சாஹிபின் ஓர் கவிதை உள்ளது:

ابن مریم کے ذکر کو چھوڑو اس سے بہتر غلام احمدؐ ہے

“மர்யமுடைய மகனின் பேச்சை விட்டு விடுங்கள். அவரை விட சிறந்தவர் குலாமே அஹ்மது - அஹ்மது (ஸல்) அவர்களின் அடிமையாவார்”

இக்கவிதையிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஹஸ்ரத் சாஹிபின் பெயர் குலாமே அஹ்மதாக இருந்தது என்று சிலர் கூறலாம். இதற்கான பதில் என்னவென்றால், இந்த கவிதையில் ஹஸ்ரத் சாஹிப் தமது பண்பை குறித்து கூறியுள்ளார்கள். அதாவது நான் குலாமே அஹ்மது ஆவேன்; மஸீஹை (ஈசப்னு மர்யமை) விட சிறந்தவன் ஆவேன். இதன் மூலம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மேன்மை தெரிய வருகின்றது. மேலும் இவ்விடத்தில் (ஹஸ்ரத் சாஹிப்) தமது பெயரை கூறவில்லை. இவ்விடத்தில் இது பெயர்தான் என்றால் பிறகு இக்கவிதைக்கு என்ன பொருள்? அதாவது,

کرامت گرچہ بے نام و نشان است بیا بنگر ز غلمان محمدؐ

“அற்புதங்கள் இக்காலத்தில் எங்கும் தென்படுவதில்லை. ஆனால் நீங்கள் வந்து, குலாமானே முஹம்மதுவிடமிருந்து - முஹம்மது (ஸல்) அவர்களின் அடிமைகளிலிருந்து அற்புதங்களைக் காணுங்கள்.” இக்கவிதைக்கு ‘எவரது பெயர் குலாம் முஹம்மதாக இருக்கிறதோ அவர்களிடமிருந்து அற்புதங்களை காணுங்கள்’ என்று பொருளா? இக்கவிதைக்கு இது பொருள் அல்ல. மேலும் இங்கு குலாமே முஹம்மது என்ற சொல் பெயர் என்ற பொருளில் வரவில்லை. மாறாக, ‘எவர் முஹம்மதின் அடிமையாக இருப்பாரோ’ என்று குணம் என்ற பொருளில் வந்துள்ளது. இவ்வாறே முன்புள்ள கவிதையிலும் வரக்கூடிய ‘குலாமே அஹ்மது’ என்பது பெயர் அல்ல. மாறாக அன்னாரின் குணம் ஆகும். பிறகு இதனையும் நினைவில் கொள்ள வேண்டும். அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் முழு பெயர் குலாம் அஹ்மது என்பது கிடையாது என்று நாம் எப்போது கூறினோம்? அன்னாரின் முழு பெயர் குலாம் அஹ்மது ஆகும் என்பதையே நாம் ஏற்கிறோம். ஆனால் இந்த முழுப் பெயரில் அஹ்மது என்பதே அசல் பெயராக இருந்தது. குலாம் வம்ச அடையாள அடிப்படையில் மட்டுமே அதிகப்படுத்தி கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே அன்னார் தமது பெயரை சில இடங்களில் குலாம் அஹ்மது என்று எழுதினார்கள். சில இடங்களில் அஹ்மது (என்று எழுதினார்கள்). மேலும் பெயரில் சிறியதிலும் சிறிய துண்டாக எது இருக்கிறதோ, எதனை மனிதன் தனித்து உபயோகிக்கிறானோ அதுவே அசல் பெயராக இருக்கிறது.

**இரண்டாவது ஆதாரம்:** அன்னார் இந்த முன்னறிவிப்புக்கு ஒப்பானவர்கள் என்பதற்காக இரண்டாவது அடையாளம் என்னவென்றால், இறைவன் கூறுகின்றான்:

فَلَمَّا جَآءَهُمۡ بِالۡبَيِّنٰتِ قَالُوۡا هٰذَا سِحۡرٌ مُّبِيۡنٌ அதாவது, தெளிவான அடையாளத்துடன் அந்த தூதர் வந்த பிறகு மக்கள் இது தெளிவான மாயவித்தையே என்று கூறினர். (61:7) இவ்வசனத்திலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அந்த தூதர் வரும்போது அவர் தரும் தெளிவான அடையாளங்களை கேட்டு அந்த மக்கள், ‘இது தெளிவான மாயவித்தையே’ என்று கூறுவர். அதாவது தெள்ளத் தெளிவான ஏமாற்றும் அல்லது மாயாஜாலம் ஆகும் என்று கூறுவர். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுடனும் இவ்வாறே நடந்தது என்பதை நாம் பார்க்கிறோம். அன்னார் வலுவான ஆதாரங்கள் மற்றும் தீர்க்கமான ஆதாரங்களை தமது எதிரிகளுக்கு முன்பு வைத்தபோது பல்வேறு மக்கள் இவ்வாறு கூச்சலிட்டனர். அதாவது கூற்றுகள் அனைத்தும் கவர்ச்சியானதாக இருக்கிறது. ஆனால் அனைத்தும் பொய்யானதே. மேலும் பலர் இவ்வாறும் கூறினர். ‘அன்னாரின் எழுத்துக்களில் எவ்வாறானதொரு மாயாஜாலம் இருந்தது

என்று சொன்னால் படிப்பவர்களை தம்பக்கம் ஈர்த்து விடுகிறது. ஆகவே இதனைப் படிக்க கூடாது.' காஜா சாஹிப் சியால்கோட்டில் உரை ஆற்றியபோது, 'மிர்ஸா சாஹிபை யாரும் மாயாவித்தைக்காரர் என்று கூறவில்லை. ஆகவே, அவர் இந்த முன்னறிவிப்பிற்கு ஒப்பானவராக இருக்க முடியாது' என்று கூறினாலும் நூற்றுக்கணக்கான மக்கள் மிர்ஸா சாஹிபிற்கு மாயவித்தை தெரியும் என்று கூறினர். மிர்ஸா சாஹிபிற்கு மாயவித்தை தெரியும் என்று இப்போதும் கூறுகின்றனர்.

இவ்விடத்தில் சிலர் இவ்வாறு ஆதாரம் தந்தாலும் அதாவது இங்கு அல்லாஹ் فَلَمَّا جَآءَهُمْ بِالْبَيِّنٰتِ قَالُوْا هٰذَا سِحْرٌ مُّبِيْنٌ என்று கூறுகிறான். அதாவது அந்த ரஸூல் அவர்களிடம் ஆதாரங்களுடன் வந்தபோது இது தெளிவான மாயாஜாலமே என்று கூறினர். ஆகவே இந்த வசனம் இறங்குவதற்கு முன்பாகவே அந்த ரஸூல் வந்திருக்க வேண்டும். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே ஆவார்கள் (என்பது தெளிவாகிறது என்று கூறுகின்றனர்). ஆனால் எவருக்கு திருக்குர்ஆனின் கூற்றின் நடைமுறையைப் பற்றி தெரியாதோ அவரே இவ்வாறான ஆட்சேபனையை செய்ய முடியும். ஏனென்றால் திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் வரக்கூடிய நிகழ்வை குறித்து இறந்த காலத்தில் கூறப்பட்டுள்ளது. எந்த அளவுக்கு என்று சொன்னால், சில இடங்களில் நரகவாதிகள் மற்றும் சுவர்க்கவாதிகளின் கூற்றுக்களை இறந்தகால அடிப்படையில் கூறப்பட்டுள்ளது. ஆகவே மற்ற ஆதாரங்களை கொண்டு வருங்காலத்தில் வரக்கூடிய தூதரையே இது குறிக்கிறது என்பது நிரூபணமான பின்பு, இந்த வசனத்தில் காணப்படும் இறந்தகால சொல்லை அடிப்படையாகக் கொண்டு அந்த தூதர் இந்த வசனம் இறங்குவதற்கு முன்பு வந்து விட்டார் என்று கூறுவது எவ்விதத்திலும் ஆதாரமாக இருக்க முடியாது.

### அஹ்மதின் மதிப்பீடு தொடர்பான மூன்றாவது சான்று:

இந்த வசனத்தில் 'அந்த ரஸூல் வரும்போது மக்கள் அவரை மாயக்காரர் அல்லது பொய்யர் அல்லது விதிப்பலன் சொல்பவர் அல்லது ஏமாற்றுக்காரர் என்று கூறுவர், என்பதை கூறிய பிறகு அல்லாஹ் கூறுகிறான்:

وَمَنْ اَظْلَمُ مِمَّنِ افْتَرٰى عَلَى اللّٰهِ الْكَذِبَ وَهُوَ يُدْعٰۤى اِلَى الْاِسْلَامِ ؕ
وَاللّٰهُ لَا يَهْدِى الْقَوْمَ الظّٰلِمِيْنَ

அதாவது அவர் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப் -படுகையில், அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுபவரை விட மிகவும் அநீதியிழைப்பவன் வேறு யார்? மேலும் அல்லாஹ் அநீதியிழைப்பவருக்கு நேர்வழி காட்டமாட்டான். (61:8)

இவ்வசனத்தில், எவரொருவர் இறைவன் மீது இட்டுக்கட்டுவாரோ அவர் மிக அதிகமாக தண்டனை பெறுபவராவார் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவர் நீங்கள் கூறுவதுபோன்று பொய்யர் என்றால் பிறகு அவர் அழிந்து போக வேண்டுமே அல்லாமல் வெற்றி பெற முடியாது. ஆக இறைவன் மீது இட்டுக்கட்டுபவர் நேர்வழி பெற முடியாது எனும்போது, எவரொருவர் இறைவன் மீது இட்டுக்கட்டி அநீதியிழைப்பவனை விட மிக அதிக அநீதியிழைப்பாரோ அவருக்கு (அல்லாஹ்) எவ்வாறு நேர்வழி காட்ட முடியும்!? ஆகவே இம்மனிதர் வெற்றி பெறுவது, இவர் இறைவன்



புறமிருந்தே வந்துள்ளார் என்பதற்கும், நீங்கள் கூறுவது போன்று பொய்யர் அல்ல என்பதற்கும் சான்றாகும்.

இந்த வசனத்தில் அஹ்மதை குறித்த தீர்வை எந்த அளவுக்கு கூறி விட்டான் என்றால் ஒரு நடுநிலை உள்ளம் கொண்டவருக்கு, 'இந்த அஹ்மது, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு பிறகு வருபவர் ஆவார் மேலும் நபி (ஸல்) அவர்கள் அந்த ரஸூலும் இல்லை அன்னாருக்கு முன்பும் இப்பெயரில் எந்த ரஸூலும் வந்து செல்லவில்லை' என்பதை ஏற்றுக் கொள்வதில் எந்த சந்தேகமும் இருக்க முடியாது. ஏனென்றால் அல்லாஹ் இவ்வசனத்தில் ஒரு நிபந்தனையை வகுத்து விட்டான். அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும் பொருந்தாது. அன்னாருக்கு முன் சென்ற எந்த நபிக்கும் பொருந்தாது. அந்த நிபந்தனை என்னவென்றால், அல்லாஹ் கூறுகின்றான், "அவர் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப -படுகையில், அல்லாஹ்வின் மீது இட்டுக்கட்டுபவரை விட மிகவும் அநீதியிழைப்பவன் வேறு யார்?" என்பதாகும். அவர் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்படுவார் என்ற நிபந்தனை எவ்வாறான நிபந்தனை என்றால், அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது நிறைவேறவில்லை. ஏனென்றால், இஸ்லாம் என்பதற்கு திருக்குர்ஆனிலிருந்து இரண்டு பொருள்கள் காண கிடைக்கின்றன. அதில் ஒன்று, தமது அசல் நிலையில் நிலைத்திருக்கும் அனைத்து உண்மையான மார்க்கத்தின் பெயருக்கு பண்பின் அடிப்படையில் இஸ்லாம் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இப்படி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன் சென்ற அனைத்து நபிமார்களுக்கும் முஸ்லிம் என்று கூறப்பட்டுள்ளது. இரண்டாவது (பொருள்), ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது இறக்கப்பட்ட மார்க்கத்திற்கு இஸ்லாம் என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஆகவே, 'அவர் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்படுகையில்' என்ற வாசகம் இரண்டு பொருளையே கொண்டதாக இருக்க முடியும். ஒன்று என்னவென்றால், அவர் அந்நேரத்தில் மிகச் சரியான, உண்மையான மார்க்கத்தின் பக்கம் அழைக்கப்படுவார். அல்லது இஸ்லாம் என்ற பெயரை கொண்ட மார்க்கத்தின் பக்கம் அழைக்கப்படுவார் என்பதாகும். ஆனால் இவ்விரண்டும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பொருந்துவதில்லை. ஏனென்றால் அன்னாரின் காலத்தில் அவர்கள் இருந்த அந்த மார்க்கத்தை தவிர வேறு எந்த

உண்மையான மார்க்கமும் இருந்ததில்லை. மேலும் நிராகரிப்பவர்களின் மீது வாதத்தை நிலைநிறுத்துவதற்காக அவர் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்படுவார் என்று கூறுவதற்கு நிரகாரிப்பவர்களின் பார்வையில் உண்மையான மார்க்கமாக இஸ்லாம் இருந்ததுமில்லை. மீதம் எஞ்சியிருப்பது வேறு ஏதேனும் மார்க்கத்தின் பெயர் இஸ்லாமாக இருக்கலாம் அல்லவா? (என்ற கேள்வி). (இதற்கான பதில்) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தை தவிர்த்து வேறு எந்த மார்க்கத்திலும் இவ்விஷயம் காண கிடைப்பதில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த மார்க்கமே இஸ்லாம் ஆகும். ஆகவே இந்த நிபந்தனையானது அதாவது ''அவர் பொய்யர் என்றால், மக்கள் அவரை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பர்'' என்பது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பொருந்துவ-தில்லை. ஏனென்றால் மக்கள அன்னாரை இஸ்லாத்தின் பக்கம ் அழைத்ததில்லை. மாறாக 'லாத்' மற்றும் 'மனாத்' -இன் பக்கம் அழைத்தனர். கிறித்தவரோ, யூதரோ அல்லது சர்திஷ்தோ இவ்வாறு வேறு எவரும் அன்னாரை இஸ்லாத்தின் பக்கம் அழைத்தவர்களாக இருந்த -தில்லை. மாறாக அன்னார் மக்களை இஸ்லாம் மார்க்கத்தின் பக்கம் அழைத்து வந்தார்கள். ஆக அன்னார் 'தாயியுன் இலல் இஸ்லாம்' - இஸ்லாத்தின் பக்கம் அழைப்பவர் ஆக இருந்தார்களே அல்லாமல் 'யுத்ஆ இலல் இஸ்லாம்' - இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்படுபவர் ஆக இருந்ததில்லை. மேலும் ஒருவர் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்படுகிறார் என்றால் அந்த நேரத்தில ் உலகத்தில் இஸ்லாம் என்ற பெயரில் ஒரு மார்க்கம் இருக்க வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகே அந்த நபர் வர முடியும் என்பதில் எவ்வாறு சந்தேகம் இருக்க முடியும்? ஏனென்றால் நபி (ஸல்) அவரகளே இவ்வுலகத்திற்கு இஸ்லாம் என்ற பெயர் கொண்ட மார்க்கத்தைக் கொண்டு வந்தார்கள். ஆக கூற வருவது என்னவென்றால், 'யுத்ஆ இலல் இஸ்லாம்' என்ற வாசகத்தின் நிபந்தனை, 'இந்த நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு வருவார்' என்பதை வெளிப்படுத்துகிறது. மேலும் அந்நேரத்தில் உள்ள முஸ்லிம்கள் அவரை நோக்கி "நீர் ஏன் கா.்.பிர் ஆகின்றீர்? உமது வாதத்தை விட்டுவிட்டு இஸ்லாம் பக்கம் முகத்தை திருப்புவீராக'' என்று கூறுவர். இதற்கு பதிலாக இறைவன் கூறுகிறான், "இவர் உண்மையில் பொய்யராக இருந்து நீங்கள் உண்மையாளர் என்றால், இவர் கா.்.பிராக இருந்து நீங்கள் முஸ்லிமாக இருந்தால், நீங்கள் அவரை இஸ்லாத்தின் பக்கம் அழைத்து அவர் கு.்.ப்ர் பக்கம் செல்பவராக இருந்தால், மேலும் இறைவன் மீது இட்டுக்கட்டுபவர் என்றால் பிறகு இவரை விட அதிக அநீதியிழைப்பவர் வேறுயாராக இருக்க முடியும்? அவர் அழிய வேண்டும். ஏனென்றால் அநீதியிழைப்பவனுக்கு இறைவன் நேர்வழி காட்டமாட்டான். இவர் அதிகமாக அநீதியிழைப்பவர் ஆவார். ஆகவே இவருக்கு அழிவும் வரவில்லை. மாறாக அனைத்து இடங்களிலும் நேர்வழி பெறுகிறார். ஆகவே இவர் எவ்வாறு பொய்யராக இருக்க முடியும்? மேலும் நீங்கள் இஸ்லாத்தில் இருந்தும் இழிவடைகின்றீர்கள் என்றால் இது எவ்வாறு சாத்தியமானது? சுருங்கக்கூறுவது என்னவென்றால், இவ்வசனத்தில் (அல்லாஹ் அஹ்மது என்ற தூதரின் எதிரிகளுக்கு எதிராக வலுவான வாதத்தை நிலை நாட்டியுள்ளான். மேலும் வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களும் 'மன் அழ்ல முமிம்மனி.்.ப்தரா அலல்லாஹ்' என்ற வசனத்தின் மீது அதிக அழுத்தமும் கொடுத்து வந்தார்கள் என்பதை நாம் பார்க்கிறோம்.



சிலர் இவ்விடத்தில் இவ்வாறும் கூறுவதுண்டு. அதாவது 'யுத்ஆ இலல் இஸ்லாம்' எனும ் வாசகம் தூதரைச் சார்ந்தது அல்ல; மாறாக அவரின் எதிரியைச் சார்ந்ததாகும். மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: "எவன் இஸ்லாத்தின ் பக்கம் அழைக்கப்பட்ட நிலையில் அல்லாஹ்வின் மீது இட்டுக் -கட்டுகிறானோ அவனை விட மிக அதிக அநீதியிழைப்பவன் வேறுயாராக இருக்க முடியும்? ஆகவே இவ்விடத்தில் ஹஸ்ரத ் நபி (ஸல்) அவர்களின் எதிரிகளை குறித்து சுட்டிக் காட்டப் -பட்டுள்ளது. அவர்கள் இஸ்லாத்தின் பக்கம ் அழைக்கப்பட்டார்கள் என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்?

இவ்வாறான சிந்தனை துவக்கத் -தில் சரியானது என்றுதான் தெரியும். ஆனால் திருக்குர்ஆனை சற்று சிந்தித்துப் பார்த்தோம் என்றால், இது தவறானது என்பது புலப்படும். அது எவ்வாறு என்றால், இவ்விடத்தில் இறைவனை நோக்கி ஒரு விஷயத்தைத் தொடர்புபடுத்திக் கூறும் ஒருவரைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஏனென்றால் இட்டுக்கட்டுதல் என்பதன் பொருளே, வேண்டுமென்று ஒரு விஷயத்தை உருவாக்குதல் என்பதாகும். மேலும் பொய் (கிஸ்ப்) மற்றும் இட்டுக்கட்டுதல் (இ.்.ப்தரா) இவற்றில் உள்ள வித்தியாசம் என்னவென்றால், பொய் என்பது தவறான விஷயத்திற்கும் கூறப்படும். அதை அவர் சுயமே உருவாக்காமல் வேறு ஒருவரிடமிருந்து கேட்டிருக்கலாம். உதாரணத்திற்கு, ஒருவர் மற்றொருவர் இடமிருந்து கேட்டு 'ஸைது லாஹூர் சென்று விட்டார்' என்று கூறுகிறார். ஆனால் அவர் லாஹூர் செல்லவில்லை. ஆக இவர் பொய்யர் ஆவார். இட்டுக்கட்டுபவர் அல்ல. ஆனால் அவர் (யாரிடமிருந்தும் ் கேட்காமல்) தானாக இவ்விஷயத்தை உருவாக்கி கூறினால் அவர் பொய்யராகவும் இருக்கின்றார், இட்டுக்கட்டுபவராகவும் இருக்கிறார். ஆக, வசனத்தில் 'இ.்.ப்தரா

அலல்லாஹ்' என்று வந்துள்ளது. இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அல்லாஹ்வை தொடர்புபடுத்தி ஏதோ ஒரு விஷயத்தைக் கூறும் ஒருவரை பற்றி கூறப்பட்டுள்ளது. அதாவது 'முத்ஆ' (வாதி) ஆவார். திருக்குர்ஆனில் எவ்விடத்திலும் நிராகரிப்பாளரை குறித்து 'மு.ஃப்தரி அலல்லாஹி' என்ற சொல் வரவில்லை. மாறாக, இச்சொல் எங்கு உபயோகிக்கப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் வாதியை தொடர்புபடுத்தியே கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் கு.ஃப்பாரைத் தொடர்புபடுத்தி எங்கு இந்த சொல் உபயோகிக்கப்பட்டுள்ளதோ அங்கு அதற்கு (அச்சொல்லிற்கு) முன்பாக அவர்களின் வாதத்தை கூறப்பட்டுள்ளது. ஆக, 'இ.ஃப்தரா அலல்லாஹி' என்ற சொல்லானது இவர் ஒரு 'முத்தஆ' (வாதி) ஆவார் என்பதை வெளிப்படுத்துகிறது. இப்போது நாம் இந்த வசனத்தை பார்ப்போம் என்றால், இதில் இறைவனை தொடர்புபடுத்தி ஏதேனும் ஒரு வாதத்தை நிராகரிப்பாளர்கள் செய்வதாக இல்லை. மாறாக அவர்களின் மறுப்பு மட்டுமே கூறப்பட்டுள்ளது. மேலும் நிராகரிப்பாளனை தொடர்புபடுத்தி 'மு.ஃப்தரி அலல்லாஹி' என்று கூறுவதில்லை. ஆகவே இவ்வசனத்தின் பொருளாக நிராகரிப்பாளர்கள் இருக்க முடியாது. மாறாக தூதுத்துவவாதியை பற்றியே இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளது. அவர் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கப்படும் நிலையில் பொய் கூறுகிறார் என்று சொன்னால் பிறகு அவர் ஏன் அழிந்து விடவில்லை!?




ஒரு வாதத்திற்கு நான் இதனை ஏற்றுக் கொண்டாலும் அதாவது நிராகரிப்பாளரின் இக்கூற்று அதாவது 'இது தெளிவான ஒரு மாயவித்தையே' என்பது அவர்களின் வாதம் ஆகும். ஒரு புத்திசாலி இதனை வாதம் என்று கூறமாட்டார். மாறாக இது அவர்களின் மறுப்பே என்றே கூறுவார். இருப்பினும் இவ்வசனம் கு.ஃப்பார் மீது பொருந்துவதில்லை. ஏனென்றால், இவ்வசனத்தில் 'இ.ஃப்தரா அலல்லாஹ்' என்ற சொல் வந்துள்ளது. இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், அந்த மனிதரின் வாதமானது இறைவனை தொடர்புபடுத்தி அமைந்துள்ளது. மேலும் அவர் என்ன கூறுகிறாரோ அதை இறைவனை தொடர்புபடுத்தி கூறுகிறார். இன்ன நபர் பேசக்கூடிய விஷயம் மோசடியாகும் என்று கூறினால், அதை நாம் வாதமாக எடுத்துக் கொண்டாலும், அது அவதூறாக இருந்தாலும் இறைவன் மீது கூறப்பட்ட அவதூறாக இருக்காது. ஏனெனில் இது பொய் என்றால் உண்மையாளர் மீது சுமத்தப்பட்ட பொய்யாகும். இவர் அவரை பொய்யர் எனக் கூறுகிறார். இது இறைவன் மீது சுமத்தப்பட்ட அவதூறாகாது. ஆனால் கூறப்பட்டுள்ள இவ்வசனத்தில் 'இ.ஃப்தரா அலல்லாஹி' என்று வந்துள்ளது. இது எதனை நிரூபிக்கிறது என்றால், இவ்வசனத்தில் எந்த ரஸூலின் வருகையை குறித்து முன்பு கூறப்பட்டுள்ளதோ அந்த ரஸூலை குறித்து கூறப்பட்டுள்ளது. மேலும் இம்மனிதர் தனது தூதுத்துவ வாதத்தில் பொய்யர் என்றால் மேலும் இறைவன் மீது இட்டுக்கட்டுகிறார் என்றால் பிறகு இஸ்லாம் இருந்தும், இவர் இவ்வாறான தவறை செய்தும் இறைவன் அவரை அழிக்காததற்கு காரணம் தான் என்ன?

ஆக சுருங்கக் கூறுவது என்னவென்றால், இவ்வசனத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளதாவது, இந்த அஹ்மது என்ற ரஸூல் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு பிறகு வருபவர் ஆவார், அப்போதுள்ள முஸ்லிம்கள் அவரை நோக்கி இஸ்லாத்தின் பக்கம் வாரும் என்று கூறுவர். மேலும் இறைவன் தனது ரஸூல் வாயிலாக இவ்வாறு கூறுவான். அதாவது இஸ்லாம் உங்களிடம் இருக்கிறது, அவரை இஸ்லாமை நோக்கி நீங்கள் அழைக்கிறீர்கள். அதன் பிறகும் அவர் இறைவன்மீது இட்டுக்கட்டுவதை விட்டு விலகவில்லை என்றால், பிறகு அவர் ஏன் அழிந்து போவதில்லை? அவர் அழிந்து போகாதிருப்பது, அவரே இஸ்லாத்தில் இருக்கிறாரே அல்லாமல் நீங்கள் இல்லை என்பது தெரிகிறது.

இறுதியில் நான் இதன் பக்கமும் சுட்டிக்காட்டுவது தகுந்தது என கருதுகிறேன். அதாவது 'மன்அழ்லம மிம்ம னி.ஃப்தரா அலல்லாஹி கஸிபா' என்று திருக்குர்ஆனில் பல இடங்களில் வந்துள்ளது. அங்கெல்லாம் முன்னறிவிப்பு கிடையாதே என்று ஆட்சேபிப்பது சரியானது அல்ல. ஏனென்றால் அங்கு எவ்விடத்திலும் 'வஹுவ யுத்ஆ இலல் இஸ்லாம்' என்ற நிபந்தனை கூறப்படவில்லை. இவ்விடத்தில் மட்டுமே இந்த நிபந்தனை கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து தெளிவாக விளங்குவது என்னவென்றால் இவ்விடத்தில் பொதுவான முறையில் கூறப்படவில்லை. மாறாக (இங்கு) ஒரு முன்னறிவிப்பு உள்ளது. ஆகவே இந்த வாசகத்தை அதிகப்படுத்தி இஸ்லாம் தோன்றிய பிறகு அந்த தூதர் வருவார் என ஒரு வரையறையையும் நிர்ணயம் செய்துள்ளது.

(தொடரும்)



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

4

## - மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

### பிறப்பும் இளமைப் பருவமும்

மிர்ஸா குலாம் முர்தஸா அவர்களின் முதல் ஆண் குழந்தை சிறு வயதிலேயே இறந்து விட்டது. அதன் பின்னர் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவருக்கு முராது பீவி என்று பெயர் சூட்டப்பட்டது. அவர் மிகவும் பயபக்தியுள்ள பெண்ணாக விளங்கினார். அதன் பின் மிர்ஸா குலாம் காதிர் பிறந்தார். (அன்னார் 1883 -ஆம் ஆண்டு தமது 55 -ஆவது வயதில் மரணம் அடைந்தார்.) அவருக்குப் பின் ஓரிரு குழந்தைகள் பிறந்தன. அவையும் தமது இளம் வயதிலேயே இறந்து விட்டன. மிர்ஸா குலாம் முர்தஸா அவர்களின் மனைவியான சிராக் பீவி அவர்கள் தமக்கு ஓர் ஆண் குழந்தை பிறப்பதற்காகப் பிரார்த்தனை செய்தார். இந்நிலையில் தான் 1835 -ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 13 -ஆம் நாள் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் பிறந்தார்கள். அவர்கள் ஒரு பெண் குழந்தையோடு சேர்ந்து இரட்டைக் குழந்தையாகப் பிறந்தார்கள். ஜன்னத் என்ற பெயர் கொண்ட அந்தப் பெண் குழந்தை சில நாட்களில் இறந்து விட்டது. வாக்களிக்கப்பட்ட மஸீஹ் இரட்டைக் குழந்தைகளில் ஒருவராகப் பிறப்பார் என்று முஹ்யுத்தீன் இப்னு அரபி அவர்கள் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள். பைபிளின் வம்ச பரம்பரைக் கணக்குப்படி ஆதம் தோன்றியதிலிருந்து 6000 ஆவது ஆண்டின் இறுதிப் பகுதியில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தோன்றினார்கள். இது தொடர்பாக உள்ள மற்ற முன்னறிவிப்புகளோடும் இது இணக்கமாக உள்ளது. அவர்கள் பிறந்த பொழுது அங்கு மிகுந்த மகிழ்ச்சியும் கொண்டாட்டமும் காணப்பட்டது. குழந்தையைக் காண வந்த அனைவரும் குழந்தையைப் பொதிந்திருந்த அணைப்புத் துணிகளைச் சுற்றிக் காணப்பட்ட ஒளி வட்டத்தைக் கண்டு அதிசயித்தனர். முழுக்குடும்பத் -திற்கும் அருளைச் சுமந்து வந்த அந்தக் குழந்தையைத் தந்ததற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தினர்.

அந்தக் குழந்தை வளர்ந்த பொழுது அவர்களை அவர்களின் தாயார் தமது பெற்றோர் வசித்து வந்த ஹோஷியார்பூர் மாவட்டத்திலுள்ள அய்மா என்ற கிராமத்திற்குப் பலமுறை எடுத்துச் சென்றார்கள். கிராமத்தில் இருந்த சிறியோர்களும் பெரியோர்களும் அந்தச் சிறுவன் மீது அக்கறை காட்டினார்கள். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அங்கிருந்த மலைப்பாங்கான பகுதியில் காணப்பட்ட நீரோட்டங்களின் கரைகளில் விளையாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். நீர் வரத்துப் பெருகி ஹோஷியார்பூர் மாவட்டத்தின் சமவெளிப் பகுதிகளில் நீர் பாயும். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பறவைகளோடு விளையாடுவதில் மிகுந்த மகிழ்ச்சி கொண்டார்கள். சிட்டுக் குருவிகளோடு விளையாடி மகிழ்ந்தார்கள். விண்ணுலகத் தந்தையின் அன்பான அரவணைப்பு மனிதனைப் பல சிட்டுக் குருவிகளை விடச் சிறந்ததாகக் கருதுகிறது என்பதை வலியுறுத்திச் சொன்ன இயேசுநாதரைப் போன்ற ஒருவரது வாழ்வில் இவ்வாறு நடந்தது மிகப் பொருத்தமாக அமைந்திருந்தது. தாம் இவ்வாறு சிட்டுக் குருவிகளைப் பிடித்து விளையாடுவது பிற்காலத்தில் தாம் மேற்கொள்ள இருக்கும் பணியில் மனித இனத்தின் பெரும்பான்மையான ஆன்மாக்களால் தமது வலையை நிரப்பப்போகும் தமது பணிக்கான ஆயத்தம்தான் எனபதை அந்நேரம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அறிந்திருக்கவில்லை.

ஒரு முறை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் காதியானில் உள்ள வயல் வெளிகளில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவர்களுக்குத் தமது வீட்டிலிருந்து ஒரு பொருளை எடுத்து வர வேண்டியதிருந்தது. அருகில் ஒரு மனிதர் தமது ஆட்டு மந்தையை மேய்த்துக் கொண்டிருந்தார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவரிடம் தமக்குத் தேவைப்படும் அந்தப் பொருளைத் தமது வீட்டிலிருந்து தமக்காக எடுத்து வரும்படிக் கேட்டுக் கொண்டார்கள். அந்த மனிதர் தமது ஆட்டு மந்தையைப் பார்த்துக் கொண்டிருந்ததால் தம்மால் போக இயலாது என்பதைத் தெரிவித்தார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தாம் அந்த மந்தையைப் பார்த்துக் கொள்வதாகக் கூறினார்கள். எனவே அந்த மந்தைக் காப்பாளர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவரகள் வீட்டிற்குச் சென்று அவர்கள்

கேட்ட அந்தப் பொருளைக் கொண்டு வந்தார். அவர் சென்று வந்த அந்த இடைப்பட்ட நேரத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவரது ஆட்டு மந்தையைப் பார்த்துக் கொண்டார்கள். இவ்விடத்தில் மார்க்க உலகில் ஓர் உயரிய இடம் வழங்கப்படும் 'நல்ல மேய்ப்பர்' என்னும் பண்பு அவர்கள் அறியாமலேயே உருவகப்படுத்தப்படுவதைக் குறிப்பிட்டாக வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மக்காவில் சில காலம் மந்தையைப் பராமரிக்கும் பணியாளராக இருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத் -தக்கது. (சஹீஹ் புஹாரி)



வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களின் இல்லம், ஸியால்கோட்

ஒருமுறை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் விளையாட்டுத் தோழர்கள் அவர்களிடம் கொஞ்சம் சர்க்கரை கொண்டு வரும்படிக் கேட்டுக் கொண்டார்கள். அன்னார் தம் வீட்டிற்குச் சென்று சர்க்கரை எடுப்பதாக நினைத்துக் கொண்டு வெள்ளையாகக் காணப்பட்ட ஒரு பொருளை எடுத்துத் தம் பைகளை நிரப்பிக் கொண்டார்கள். வருகின்ற வழியில் இனிப்பான அந்தப் பொருளைச் சாப்பிட வேண்டும் என்ற ஆசை வந்தது. எனவே அதில் ஒரு பிடியை அள்ளித் தம் வாயில் போட்டார்கள். அப்போதுதான் தாம் சர்க்கரை என்று கருதி எடுத்து வந்தது சர்க்கரை அல்ல; உப்பு என்று அவர்களுக்குத் தெரிந்தது.

மேற்போக்காகப் பார்க்கும்போது ஒருவருக்கு இந்த நிகழ்ச்சி கவனக்குறைவு எனத் தோன்றலாம். ஆனால் பின்னர் நடந்தவற்றை வைத்துப் பார்க்கும் பொழுது இந்த உலகத்திற்குத் தொடர்பில்லாத தூய்மையான சூழ்நிலையில் புனிதமான விஷயங்களில் மூழ்கி வாழ்ந்த ஒரு மனத்தின் முதல் விழிப்புணர்வு ஏற்படுத்திய நிகழ்வு அது என்பதை ஆழ்ந்து சிந்திக்கும் ஒருவர் புரிந்து கொள்வார்.

அவர்களுடைய இளமைக் காலத்தில் நடைபெற்ற இன்னொரு சுவையான நிகழ்வையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அன்னார் சிறுவரான இருந்த போது தம்முடன் விளையாட வந்த ஒரு சிறுமியிடம் - அந்தச் சிறுமியே பின்னாளில் அவர்களுக்கு மணமகளாக நிர்ணயிக்கப்பட்டார் - தமக்கு துஆவின் அருளை வழங்குமாறு துஆச் செய்யும் படிக் கேட்டுக் கொண்டார்கள். உலகாதாயமான வாழ்க்கை நடத்தும் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் உள்ளத்தில் இளம் வயதிலேயே எழுந்த துஆவின் அருளைப் பெற வேண்டும் என்ற இந்த ஏக்கம் அவர்களை ஆச்சரியகரமான அளவுக்குத் தூய்மையான உள்ளம் கொண்டவராகவும் உலகில் மிகப் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவராகவும் ஆக்கியது.

அக்காலத்தில் பள்ளிக்கூடமோ கல்லூரியோ பிற கல்வி நிலையங்களோ அங்கு இருந்ததில்லை. கல்விக்கு அதிக முக்கியத்துவம் இல்லாமல் இருந்தது. ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர் ஆக இருந்ததால் 1841 -ஆம் ஆண்டு அவர்களுடைய ஆறு, ஏழு வயதில் அவர்களுக்குப் போதிப்பதற்காக ஒரு தனி ஆசிரியரை அவர்களுடைய தந்தையார் நியமித்தார். அந்த ஆசிரியர் பெயர் ஃபஸ்லே இலாஹி. காதியானைச் சேர்ந்த அவர் ஹனஃபி பிரிவைச் சேர்ந்தவராவார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குத் திருக்குர்ஆனையும் பாரசீக மொழியில் உள்ள சில ஆரம்ப நிலை நூல்களையும் பயிற்றுவித்தார்.

1845 -ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குப் பத்து வயதாக இருந்தபோது மற்றொரு ஆசிரியர் நியமிக்கப்பட்டார். அவருடைய பெயர் ஃபஸல் அஹ்மது ஆகும். அவர் குஜ்ரன்வாலா மாவட்டத்திலுள்ள ஃபெரோஸவாலா என்ற பகுதியைச் சேர்ந்தவர். அவர் அஹ்லே ஹதீஸ் பிரிவைச் சேர்ந்தவராவார். அவருடைய மகனான ஸியால்கோட்டைச் சேர்ந்த முபாரக் அலி எனபவர் பிற்காலத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் சீடரானார். அவ்வாசிரியர் நல்லியல்பு கொண்டவராகவும், பக்தியுள்ளவராகவும் விளங்கினார். அவர் தம்முடைய மாணவருக்குக் கற்றுக் கொடுப்பற்கு மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டார். அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு அரபி இலக்கணத்தின் ஆரம்ப நிலைப் பாடங்களைப் பயிற்றுவித்தார்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு 17 அல்லது 18 வயது ஆன போது பட்டாலாவைச் சேர்ந்த குல் அலி ஷாஹ் என்பவர் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு உயர் நிலை அரபி இலக்கணமும் தர்க்க சாஸ்திரமும் கற்றுக் கொடுத்தார். இந்த வகையான பயிற்சி என்பது அக்கால நடைமுறையில் உள்ள ஒன்றாகவே இருந்தது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தந்தையார் ஓர் அனுபவம் வாய்ந்த மருத்துவராக இருந்ததால் அவரே தம் மகனுக்கு மருத்துவத்தின் ஆரம்பப் பாடங்களைக் கற்றுக் கொடுத்தார்.

அக்காலத்தில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. எங்கும் அறியாமை பரவிக் கிடந்தது. உண்மையிலேயே அது ஓர் இருண்ட காலமாக இருந்தது. மக்கள் கல்வி கற்பதில் கவனமற்றவர்களாக இருந்தார்கள். சீக்கியர்கள் கல்வியை அதிகம் போற்றாதவர்களாக இருந்தனர். நாடு முழுவதும் குழப்பம் சூழ்ந்திருந்தது. எனவே ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மிகச் சிறந்த கல்வி கற்கும் வாய்ப்புப் பெற்றார்கள் என்று கூற முடியாது.

இக்காலத்தில் காணப்படும் கல்வி நிலையோடு ஒப்பிடும் போது அன்னாருக்குக் கற்றுக் கொடுத்த ஆசிரியர்களே அதிகம் கற்றவர்கள் இல்லை என்றுதான் கூற வேண்டும். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் சக மாணவர்களும் பெரிய சாதனையாளர்களாகத் திகழவில்லை என்றே தெரிய வருகிறது. மொத்தத்தில் உருது, பாரசீகம், அரபி ஆகிய மொழிகளை வாசிக்கவும் பாரசீக மொழியைப் பேசவும் எழுதவும் கற்றுக் கொள்வதே அந்தக் காலத்தில் கல்வி என்று கருதப்பட்டது. உயர் கல்வி கற்றுக் கொள்வதற்கான எந்தவிதமான வசதி வாய்ப்புகளும் அக்காலத்தில் காணப்படவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களை மற்ற மாணவர்களிடமிருந்தும் அன்னாரது குடும்பத்தைச் சேர்ந்த பிற மக்களிடமிருந்தும் பிரித்துக் காட்டியது கற்பதின் மீது அன்னாருக்கு இருந்த ஆர்வமே. அன்னார் தமது தந்தையாரின் நூலகத்தின் மீது கொண்டிருந்த ஆர்வம், அதன் மூலம் அவர்கள் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வார்களோ என்று அஞ்சி அவர்களின் தந்தையார் அவர்களைக் கடிந்து கொள்ளும் அளவுக்கு இருந்தது. தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கும் பழக்கத்திலிருந்து அவர்களை மீட்டெடுத்து உலகியல் விஷயங்களில் தமக்கு ஒத்தாசை செய்பவர்களாக மாற்றப் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது நேரத்தில் பெரும் பகுதியைப் பள்ளிவாசலில் தங்கித் திருக்குர்ஆன் படிப்பதில் செலவழித்தார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு விளையாட்டிலோ பொழுதுபோக்குகளிலோ ஆர்வம் இருந்த -தில்லை. அவற்றில் நேரடியாகப் பங்கு கொண்டதில்லை. இருந்தாலும் பல நேரங்களில் அவர்கள் விளையாட்டில் நடுவராகப் பணியாற்றியதாகக் கூறப்படுகிறது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு நீச்சலும் குதிரை சவாரியும் தெரியும். ஒரு முறை அவர்கள் நீந்திக் கொண்டிருக்கும் போது மூழ்கிவிட்டதாகவும் ஒரு பெரியவர் தம்மைக் காப்பாற்றிய -தாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்தப் பெரியவரை அதற்கு முன்னரும் கண்டதில்லை. அதற்குப் பிறகும் பார்த்ததில்லை. ஒருமுறை அவர்கள் ஒரு துடிப்பான குதிரையின் மீது சவாரி செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அந்தக் குதிரை கட்டுப்பாட்டை இழந்து ஒரு மரத்தின் மீது மோதி இறந்து விட்டது.

ஆயுதங்களைச் சேகரித்து பயிற்சி செய்து வாள், வில், துப்பாக்கி ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் தேர்ச்சி பெறுவது அக்காலத்தில் பெருமைக்குரிய விஷயமாகக் கருதப்பட்டது. வாள் சண்டை மிகவும் பிரசித்தி பெற்ற வீர விளையாட்டாகத் திகழ்ந்தது. ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இத்தகைய வீர விளையாட்டுகளில் எந்தவித ஆர்வமும் காட்டவில்லை. தம்முடைய இளமைப் பருவத்தில் கூட இவற்றில் கலந்து கொண்டதில்லை. ஏனென்றால் அவர்கள் பிற்காலத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகத் தோன்றியிருந்தார்கள்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்குப் பதினாறு வயதான பொழுது தம்முடைய தாய்மாமாவான மிர்ஸா ஜமியத் பேக் அவர்களின் மகளான ஹுர்மத் பீபியைத் திருமணம் செய்து கொண்டார்கள். இங்கு குறிப்பிட வேண்டியது என்னவென்றால், அவர்களுடைய அண்ணன் மிர்ஸா குலாம் காதிர் அவர்களுக்கும் மிர்ஸா குலாம் முஹ்யித்தீன் என்பவரின் மகளான ஹுர்மத் பீபிக்கும் நடந்த திருமணம் அதே வீட்டில் மிகுந்த கோலாகலத்துடன் பல நாட்கள் கொண்டாடப்பட்டது. அத்திருமணத்தின் போது வந்திருந்த விருந்தினர்களை மகிழ்விக்கும் விதத்தில் 22 நடன மகளிர் கலந்து கொண்ட நடன நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்று கூறப்படுகிறது. ஆனால் இதற்கு நேர்மாறாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் திருமணத்தின் போது இத்தகைய கேளிக்கைகள் எதுவும் நடைபெறவில்லை. அத்திருமணம் மிகவும் எளிமையாகவும் இஸ்லாமியப் போதனைகளுக்கு இணங்கவும் நடைபெற்றது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கு 18 அல்லது 19 வயதாக இருந்த பொழுது அவர்களுக்கு முதல் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு மிர்ஸா சுல்தான் அஹ்மது என்று பெயரிடப்பட்டது. இரண்டு ஆண்டுகள் கழித்து இரண்டாவது மகனாக மிர்ஸா ஃபஸ்ல் அஹ்மது பிறந்தார்கள்.




1849 -ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21 -ஆம் நாள் குஜராத்தில் சீக்கியர்கள் அடைந்த படுதோல்வியின் காரணமாக பஞ்சாப் ஆங்கிலேயர்களின் கைக்கு மாறியது. ஏப்ரல் 2 -ஆம் நாள் அது ஆங்கிலேய அரசாட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1853 -ஆம் ஆண்டு வரை நிர்வாகக் குழுவால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. பிறகு அந்தப் பகுதிக்கென தனி கமிஷனர் நியமிக்கப்பட்டார்.

பஞ்சாபில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதும் மிர்ஸா குலாம் முர்தஸாவின் சொத்துகள் முழுவதும் ஆட்சியாளர்களால் பறித்துக் கொள்ளப்பட்டன. அவருக்கும் அவருடைய சகோதரருக்கும் பொதுவில் ஓய்வூதியமாக ஆண்டுக்கு எழுநூறு ரூபாய் வழங்கப்பட்டது. காதியான், அதனைச் சுற்றியிருந்த கிராமங்கள் ஆகியவற்றின் சொத்துரிமை மட்டும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இதன் மூலம் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கும் ஈஸா (அலை) அவர்களுக்கும் இடையில் ஒப்புமை ஏற்படுத்தப்பட்டது. ஏனெனில் இருவருமே தமது முன்னோர்களுடைய சொத்துக்களின் வாரிசுரிமையை இழந்தவர்களானார்கள். இழந்த சொத்துகளை மீட்பதற்காக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தந்தையார் ஆயிரக்கணக்கான ரூபாயைச் செலவு செய்தார். ஆனால் அவரது முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. இதனால் ஏற்பட்ட ஏமாற்றம் அவரது வாழ்வின் இறுதி நாள் வரை நீடித்தது. இதைப் பற்றி ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்:

பல்வேறு ஏமாற்றங்களின் காரணமாக எனது தந்தையார் எப்பொழுதும் சோகமாகவும் வருத்தத்துடனும் காணப்பட்டார்கள். நியாயம் பெறுவதற்காக நீதிமன்றங்-களுக்குச் செல்வதிலும் வழக்குத் தொடுப்பதிலும் ரூபாய் 70,000 வரை செலவு செய்தார்கள. அவையனைத்தும் எந்தப் பயனையும் அளிக்கவில்லை. ஏனென்றால் எங்களுடைய மூதாதையர்களுக்குச் சொந்தமாக இருந்த அந்த நிலங்கள் நீண்ட காலத்திற்கு முன்பே எங்கள் கைகளை விட்டுச் சென்று விட்டன. அவற்றை மீட்டெடுப்பது என்பது இயலாத காரியமாக இருந்தது. இதனால் ஏற்பட்ட ஏமாற்றமும் அதன் விளைவாகத் தோன்றிய துன்பமும், துயரமும் என் தந்தையின் வாழ்க்கையை அலைக்கழித்து விட்டன. பரிதாபத்திற்குரிய அவரது நிலை என்னுள் ஒரு தூய மாற்றத்தை ஏற்படுத்தியது. ஏனென்றால் அவரது வாழ்வில் ஏற்பட்ட துயரம் இந்த உலகத் துன்பங்கள் எல்லாவற்றையும் கடந்த முற்றிலும் தூய்மையான வாழ்வின் பக்கம் என் கவனத்தைத் திருப்பின. இன்னும் சில நிலப் பகுதிகள் அவருக்குச் சொந்தமாக இருந்தன. அவருடைய நற்பணியைப் பாராட்டும் விதமாகவும், அவர் ஏற்கனவே வகித்து ஓய்வு பெற்ற பதவியின் காரணமாகவும் அவருக்கு ஆங்கில அரசிடமிருந்து ஒரு தொகை ஓயவூதியமாகக் கிடைத்து வந்தது. ஆனால் அவர் ஏற்கனவே அனுபவித்து வந்த வசதிகளோடு ஒப்பிடும் போது இது மிகவும் சொற்பமானதாகவே இருந்தது. இதன் காரணமாக அவர் எப்பொழுதும் சோகத்துடனும் வருத்தத்துடனும் காணப்பட்டார். பல நேரங்களில் தமது வருத்தத்தை வாய்விட்டுக் கூறினார். உலகியல் செல்வங்களுக்காகத் தாம் செய்த முயற்சிகளை மார்க்கத்திற்காகச் செய்திருந்தால் அது தம்மை ஓர் இறை ஞானி ஆக்கியிருக்கும் என்று கூறினார்.

இது தான் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது இளமைப் பருவத்தில் கற்ற பாடமாகும். இது அவர்களின் உள்ளத்தில் ஓர் அழுத்தமான தடத்தை ஏற்படுத்தியது. அதன் காரணமாக அவர்கள் இவ்வுலக வாழ்விலிருந்து முற்றாக விலகித் தம் வாழ்நாள் முழுவதையும் இறைப்பணிக்கே அர்ப்பணித்தார்கள். (தொடரும்....)

*(15-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

14. பெற்றோரை விட அல்லாஹ் கருணை மிக்கவன் என்றால் அவன் ஏன் மக்களை நரகில் போடுகிறான் என்று சிலர் கேட்கின்றனர். இதற்கு பதில் என்னவெனில் அல்லாஹ் தனக்கு இணைவைத்தவர்கள், வரம்புமீறி கிளர்ச்சி செய்தவர்கள், மேலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் மிக கொடிய எதிரிகள் ஆகியவர்களுக்கே நரக தண்டனை வழங்குகிறான். சந்ததிகள் கட்டுப்படாமல், கிளர்ச்சியாளர்-களாக ஆகி விடும்போது பெற்றோர்களும் கூட அவர்களை வெறுக்கின்றனர். அவர்களுக்கு எதிரியாக ஆகி விடுகின்றனர். மற்றபடி அல்லாஹ் எவ்வாறு நியாய தீர்ப்பு நாளின்போது மக்களுடன் நடந்து கொள்கிறான் என்பதை நீர் பார்த்து விட்டீர் என்று கு.ஃப்ரான் கூறினார்.

நீர் பார்த்தது போக இன்னும் பல செயல்கள் அல்லாஹ்வின் மன்னிப்பை பெற்றுத் தருகின்றன. அவை அல்லாஹ்வால் பெரிதும் விரும்பப்படுகின்ற செயல்களாகும். அவற்றுள் சில, ஐவேளைத் தொழுகை, நோன்பு நோற்றல், நல்லொழுக்கங்கள், முதியவர்களை கவனித்தல், பெற்றோருக்கு கட்டுப்படுதல், கணவர்களுடன் நேர்மையுடன் நடந்து கொள்ளுதல், அநாதைகளை கவனித்தல், ஸதகா கொடுத்தல், இஸ்திக்.ஃபார் மற்றும் தவ்பா செய்தல், இஸ்லாத்தின் தூதுச் செய்தியைப் பரப்புதல், அல்லாஹ்வை நினைவு கூறல், இறைவன் மீதான பயமும் தக்வாவும், மற்றவர்களின் குற்றங்களை மன்னித்தல், நபி (ஸல்) அவர்கள் மீது அன்புடனும் பற்றுடனும் தரூது ஓதுதல், நேர்மையுடன் நடந்து கொள்ளுதல், ஜிஹாதில் பங்கேற்றல், தியாகங்கள் செய்தல், திருக்குர்ஆனை ஓதுதல் போன்றவை.

சுருக்கமாக, எல்லா நற்செயல்களும் அல்லாஹ்வின் மன்னிப்பை ஈர்க்கின்றன, சில சமயங்களில் இந்த சிறிய நற்செயல்கள்தாம் அல்லாஹ்வால் பெரிதும் மதிக்கப்பட்டு பன்மடங்காக்கப்பட்டு அதன் விளைவாக மனிதனின் மன்னிப்பிற்கு காரணமாக அமைகின்றன. அடுத்த முறை நீ இங்கு வரும் போது மன்னிப்பின் இன்னும் சில அம்சங்களை குறித்து உனக்கு கூறுவேன் என்று கு.ஃப்ரான் கூறினார்.

பின்னர் கு.ஃப்ரான் "எப்படி இருப்பினும் அல்லாஹ்வின் கட்டளையால் உங்கள் தலைவரும் வழிகாட்டியுமான மஸீஹ் மவ்வூது (அலை) உலகில் மன்னிப்பின் ஓர் இடத்தை அமைத்துள்ளார்கள் அல்லவா? என்று கேட்டார். நான் அவரிடம் எந்த இடம் என்று கேடடேன். அதற்கு அவர் அதுதான் பெஹிஷ்தி மக்பரா. உங்களது ஜமாஅத் மிகவும் பாக்கியம் பெற்றது. முந்தைய சமுதாயங்களுக்கு கிடைக்காத அருள் உங்களுக்கு அல்லாஹ்வின் அருளினால் கிடைத்துள்ளது. எவர்கள் எல்லாம் இந்த இடத்தில் அடக்கம் செய்யப்படுவார்களோ அவர்கள் நியாயத் தீர்ப்பு நாளின் போது ஏற்கனவே அல்லாஹ்வின் மன்னிப்பின் போர்வையால் போர்த்தப்பட்வர்களாகவே வருவர்" என்று கு.ஃப்ரான் கூறினார்.

பின்னர் கு.ஃப்ரான் என்னிடம் கூறினார், "நீர் அந்த கபருஸ்தானுடன் பெஹிஷ்தி மக்பராவுடன் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டுள்ளவர். அந்த இடத்துடன் சம்பந்தப்பட்ட அல்லாஹ்வின் மன்னிப்பின் சுவையான சம்பவங்களை எனக்கு நீர் கூறுவீராக. நான் இந்த இடத்தை விளக்கமாக உமக்கு சுற்றிக் காண்பித்துள்ளேன். இப்போது என் உள்ளம் குளிரும் வகையில் நீர் உமது கண்களால் கண்டு கொண்ட ஒன்றிரண்டு சம்பவங்களை எனக்கு கூறுவீராக" என்று கேட்டுக் கொண்டார்.

நான் கு.ஃப்ரானிடம் 'சரி, நான் கூறுகிறேன்' என்று பெஹிஷ்தி மக்பராவுடன் சம்பந்தப்பட்ட சில சம்பவங்களை கூற ஆரம்பித்தேன். (தொடரும்)

*(5-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அவர்களின் ஜமாஅத்தில் இருப்பதற்கான உரிமையை செலுத்த முடியும். அப்போது தான் அல்லாஹ் நம்மை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைத்து நம்மீது செய்திருக்கின்ற பேருபகாரத்திற்கு நன்றி செலுத்த முடியும். இந்த ஜமாஅத்தில் நம்மை இணைத்துக் கொள்வதோடு மட்டும் நம்முடைய பணி முடிவடைவதில்லை. அஹ்மதியான பிறகு நாம் அஹ்மதியாகி விட்டோம். பைஅத் செய்து விட்டோம் என்பது மட்டும் போதுமானதல்ல.

மாறாக, இறைவன் நம்மீது ஒரு மாபெரும் பொறுப்பை சுமத்தி இருக்கின்றான். மேலும் இந்த பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜமாஅத்திற்கு துஆவின் பக்கம் கவனமூட்டி –யுள்ளார்கள். அதன் மூலம் ஜமாஅத்தினுடைய முன்னேற்றத்தில் நாம் உதவியாளர்களாக ஆக வேண்டும்....

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓர் உதாரணத்தை கூறியுள்ளார்கள். நம்முடைய உதாரணம் பெருமானார் (ஸல்) அவர்கள் பத்ர் போரின்போது வீசிய கற்களைப் போன்றதாகும். அல்லாஹ் கூறுகின்றான்.

وَمَا رَمَيْتَ اِذْ رَمَيْتَ وَلٰكِنَّ اللّٰهَ رَمٰى ۚ

அதாவது நீர் கற்களை வீசியது நீர் கற்களை வீசியது அல்ல. மாறாக, இறைவன் கற்களை வீசியதாகும். (8:18)

நீர் வீசிய கற்களோ சற்று தூரம் சென்று விழுந்திருக்கும். ஆனால் இதை நீர் வீசவில்லை. மாறாக, நாம் வீசினோம். கற்களை எறிவதற்காக நபி (ஸல்) அவர்கள் கையை ஓங்கிய போது நாம் புயல் காற்றினை வீசச் செய்தோம் என்று அல்லாஹ் கூறுகின்றான். இந்த காரணத்தினால் அந்த புயல் காற்று கோடிக்கணக்கான கற்களை நிராகரிப்பவர்களின் கண்களில் வீசி விட்டது. அதன் விளைவாக அவர்களின் கண்கள் மூடின. அவர்கள் தாக்குவதில் தோல்வி கண்டனர்.

சுருக்கமாக, அந்த கைப்பிடி அளவு கற்களில் இருந்த உண்மையான ஆற்றல் இறைவனின் வல்லமையாகும். ஆக, நம்முடைய நிலைமையும் நபி (ஸல்) அவர்கள் தம்முடைய கையில் எடுத்து நிராகரிப்பவர்களின் மீது எறிந்த பத்ரின் அந்த கற்களைப் போன்றதாகும். நபி (ஸல்) அவர்கள் வீசிய கற்கள் அவர்களை குருடராக்கவில்லை. மாறாக, புயல் வடிவில் அல்லாஹ் வீசிய கற்களே அவர்களை குருடர்களாக்கி விட்டது. ஆக, நம்மைத் தவிர இந்த பணியை செய்யக்கூடிய மேலும் சிறந்த விளைவை ஏற்படுத்தக்கூடிய இன்னொரு கருவி இருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். இஸ்லாத்தை பிற மார்க்கங்களை விட மேலோங்கச் செய்யும் இந்த சிறப்பான விளைவுகளுக்கு வேறு சில காரணிகள் உருவாக்கப் –பட்டிருக்கின்றன என்பதை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். இஸ்லாத்தை உலகில் வெற்றி பெறச் செய்வதற்குரிய அந்த கருவி அந்த ஆயுதம் இறைவனுடைய அருட்களை ஈர்க்கக்கூடிய அடியானின் துஆக்கள் ஆகும். மேலும் அல்லாஹ்வின் அருளின் மூலமாகவே சாத்தியமில்லாத பணியும் சாத்தியமாகின்றது.

# எந்த வயதில் ஒருவர் நோன்பு நோற்க ஆரம்பிக்க வேண்டும்?



இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

“எனது கருத்தின்படி 12 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை நோன்பு நோற்க வைப்பது குற்றமாகும். 12 முதல் 15 வயது வரையுள்ள குழந்தைகளை நோன்பு நோற்க வைப்பதும் தவறாகும். 15 வயதிலிருந்து நோன்பு நோற்கும் பழக்கத்தை உருவாக்க வேண்டும். மேலும் 18 வயது ஆகும்போது நோன்பை கடமையாகக் கருத வேண்டும். எனக்கு நினைவில் இருக்கிறது. நாங்கள் இளம் வயதில் நோன்பு நோற்க விரும்பினோம். ஆனால் வாக்களிக்கப்பட்ட ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் எங்களை அனுமதிக்கவில்லை. மேலும் எங்களை நோன்பு நோற்குமாறு வலியுறுத்துவதற்கும், தூண்டுவதற்கும் பதிலாக எப்போதும் நோன்பின் மகத்துவத்தை எங்களுக்கு புரிய வைத்தார்கள்.” (அல் ஃபஸ்ல் 11 ஏப்ரல் 1925 பக்கம் 7)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam